MITRA TIMES Tamil & English Monthly, July-2015 R.Dis.No.29/15


# FOR SALE
## விற்பனைக்கு




| | |
|---|---|
| Total Extent of the Land | 43.2 Acres |
| Vacant land | 9.2 Acres |
| Mill area with compound wall | 34.0 Acres |
| Total Frontage | 1792 ft or 546 Metres |

## MOORTHY & ASSOCIATES

501,SURUTHI BLOCK, CHITRA AVENUE, 9,CHOOLAIMEDU HIGH ROAD,
CHOOLAIMEDU, CHENNAI-600094. PHONE 23743007/23743008 FAX 42697147
Email msmoorthy68@yahoo.co.in

**Contact for further information**
9444025760 / 9940070204 / 9840719088




# மித்ரா டைம்ஸ்
# MITRA TIMES


ஆண்டு-1 Volume-1 | இதழ்-2 Issue-2 | ஜூலை-2015 July - 2015 | தமிழ் & ஆங்கிலம் மாத இதழ் Tamil & English Monthly | விலை ரூ.10/- Price Rs.10/- | ஆண்டு சந்தா ரூ.120/- Annual Subscription Rs.120/-




## ஏன் இந்த மௌனம்?



## மக்கள் சேவையில் மித்ரா செக்யூரிட்டி சர்வீசஸ்

**மித்ரா டைம்ஸ்**

மாதஇதழ்

ஆண்டு-1 ஜுன் - 2015 இதழ்-1

ஆசிரியர்
**M. சுந்தரமூர்த்தி**

இணை ஆசிரியர்
**K. பாலகிருஷ்ணன்**

தலைமை துணை ஆசிரியர்
**R. ராம்மோகன்**

துணை ஆசிரியர்கள்
**M.G. சேகர்,**
**R. குணசேகர்**

உதவி ஆசிரியர்கள்
**B. துரைராஜ்**
கோவை **K. விஜயராஜ்**

தலைமை நிருபர்
**K. ராதாகிருஷ்ணன்**

நிருபர்
பொள்ளாச்சி சாகுல் ஹமீது

வடிவமைப்பு : ராஜராஜேஸ்வரி

அலுவலகம்

நெ.602, ஸ்ருதி பிளாக்,
சித்ரா அவென்யூ,
நெ.9, சூளைமேடு ஹைரோடு,
சென்னை - 600 094.
போன் : 044 - 2374 4661
Email : mitratimes2015@gmail.com

# என் எண்ணம்...

வானில் எண்ணிடலங்காத நட்சத்திரங்கள் இருந்தாலும் சில நட்சத்திரங்கள் மட்டுமே பெயர் சொல்லி குறிப்பிடும் அளவுக்கு பிரகாசமாக ஜொலிக்கின்றன. அதேபோல நாட்டில் எத்தனையோ பத்திரிகைகள் இருந்தபோதும் பெயர் சொல்லிக் கொள்ளும் அளவிற்கு விரல் விட்டு எண்ணக்கூடிய பத்திரிகைகளே உள்ளன. இதில் பாரம்பரியம் மிக்க நடுநிலையான பத்திரிகைகளும் அடங்கும். அப்படிப்பட்ட பாரம்பரியமிக்க நடுநிலையான பத்திரிகை களின் வரிசையில் நிலைநிறுத்த மேலும் ஒரு தரமான பத்திரிகை நாட்டிற்கு தேவை என்ற எண்ணத்தில் உதித்தது தான் **“மித்ரா டைம்ஸ்”** மாதஇதழ். பத்திரிகை துறையை ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்பதில் எந்த மாற்று கருத்தும் இருக்க முடியாது.

இன்றுவரையிலும் நம் நாட்டில் ஜனநாயகம் போற்றப்பட்டு வருவதற்கு பத்திரிகை துறைதான் நான்கு தூண்களில் முதன்மையாக உள்ளது. அரசியல்வாதிகளாகட்டும் அரசு அதிகாரிகளாகட்டும் தவறு செய்தால் தண்டிக்கப்படுவோம் என்ற எண்ணத்தை அவர்களின் மனதில் பதிய வைப்பது பத்திரிகை துறை தான் என்பதில் ஐயமில்லை.

ஊழலாகட்டும், கள்ள சந்தையாகட்டும், வன்முறை வெறியாட்டங்கள் என எதுவாக இருந்தாலும் மக்களுக்கு வெளிச்சம் போட்டு காட்டுவது இத்துறைதான் என்பது மறுக்க முடியாத உண்மை. இன்று “எலக்ட்ரானிக் மீடியா” என்று அழைக்கப்படும் டிவி சேனல்களும் செய்திகளை ஒளிபரப்பி இப்பணியை செய்தாலும் “பிரிண்டிங் மீடியா” என்றழைக்கப்படும் பத்திரிகை துறையை போன்று விரிவான விளக்கமான செய்திகளை கொடுக்க முடியாது என்பதை இன்றளவும் “பத்திரிகைகளின் விற்பனை அளவு (சர்குலேஷன்) கூடிக்கொண்டே போவது தெளிவுபடுத்துகிறது.

24 மணிநேர செய்தி சேனல்கள் பல இருந்தாலும் காலையில் கிடைக்கும் செய்தித்தாள் சிறிது தாமதமாக வந்தாலும் கோபம் வருகிறது. அடுத்து செய்தித்தாள் விடுமுறை தினத்தின் மறுநாள் காலையில் கிடைக்காமல் போகும்போது மனதில் ஏதோ ஒரு வெறுமை ஏற்படுகிறது. அதுவே “பிரிண்டிங் மீடியாக்களின்” மீது மக்களுக்கு உள்ள தாக்கத்தின் அத்தாட்சி.

**“மித்ரா டைம்ஸ்”** மாதஇதழ் புதுவரவாக இருக்கலாம். ஆனால் என்னுடன் கைகோர்த்து செயல்படுபவர்கள் இத்துறையில் அனுபவ மிக்கவர்களாக மட்டுமல்லாது நாட்டின் நலனை மனதில் நிறுத்தி செயல்படுபவர்கள் என்பதில் எனக்கு பெருமையே. **“மித்ரா டைம்ஸ்”** நடுநிலையோடு மனதில் அச்சமின்றி உண்மையான செய்திகளை வழங்கும் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன்.

உங்கள் ஆதரவு இருந்தால் மட்டுமே சாத்தியம் என்பதையும் நான் அறிவேன். ஆதரவு பெருகும் என்ற நம்பிக்கையில் என் பயணத்தை தொடங்குகிறேன். நல்லதையே நினைப்போம். நல்லதே நடக்கும்.



– ஆசிரியர்
**எம்.எஸ். மூர்த்தி**



தர்மம் தலை காக்கும் தக்க சமயத்தில் உயிர் காக்கும். கூட இருந்தே குழி பறித்தாலும் கொடுத்தது காத்து நிற்கும் என்ற கண்ணதாசனின் வரிகளை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தனது படத்தில் பாடி இருப்பார். அதே புரட்சித் தலைவரால் மிகச்சிறந்த ஆளுமை கொண்டவர். நுண்ணறிவு மிக்கவர், நினைத்ததை செய்து முடிக்கும் ஆற்றல் கொண்டவர் என்று அடையாளம் காணப்பட்டு 1982 ஆம் ஆண்டு தனது

# சாதனைகள் இருக்க...

# சோதனைகள் என் செய்யும்?

அ.இ.அ.தி.மு.க. கட்சியில் கொள்கை பரப்பு செயலாளராகவும், அரசின் சத்துணவு திட்ட உயர்மட்டக் குழு உறுப்பினர் என்ற அரசு பதவியையும் வழங்கி தமிழக மக்களுக்கு ஒரு இணையற்ற தலைவியை கொடுத்தார்.

புரட்சி தலைவரால் அரசியலில் முன்னிருத் தப்பட்ட புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எத்தனையோ துரோகச் செயல்களையும், சவால்களையும் எதிர்கொண்டு அவற்றை தனது செயலாற்றலால் முறியடித்து தன்னால் மட்டுமே புரட்சித்தலைவர்கள் இயக்கத்தை வழி நடத்த முடியும் என்று நிருபித்தவர். ஆனால் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சந்தர்ப்ப சாட்சிகளால் சூழ்நிலை கைதியாக சொத்துக் குவிப்பு வழக்கில் கடந்த ஆண்டு செப்டம்பர் 27ம் தேதி கைது செய்யப் பட்டு பெங்களூரு பரப்பன அக்ரகார சிறையில் 21 நாட்கள் சிறைவாசம் செய்து அக்டோபர் 17ம் தேதி ஜாமினில் விடுதலை செய்யப்பட்டார்.

பெங்களூரு சிறை வாளாகத்திலிருந்து ஹெச்.ஏ.எல் விமானநிலையம் வரையும் சென்னை விமான நிலையத்திலிருந்து அம்மாவின் போயஸ் கார்டன் வீடு வரையும் சுமார் 15 கி.மீ தூரத்திற்கு கொட்டும் மழை

யையும் பொருட்படுத்தாது லட்சக்கணக்கான மக்கள் தங்கள் உணர்ச்சிகளை துக்கமும், மகிழ்ச்சியும் ஒருசேர ஆரவாரம் செய்து வர வேற்ற நிகழ்ச்சி நிச்சயமாக ஒரு வரலாற்று சிறப்பு மிக்க ஆச்சர்யமே. ஆம் உண்மை யிலேயே வரலாற்று ஆச்சர்யம் தான்.

பெங்களூரு சிறப்பு நீதிமன்றத்தால் குற்றவாளி என்று அறிவிக்கப்பட்டாலும் அம்மா அவர்கள் சிறையில் இருந்த நாட்களில் தமிழக மக்கள் பட்ட மன வேதனயை உலகம் கண்டது. நாடு முழுவதும் அம்மாவின் விடுதலைக்காக மக்கள் செய்த பிரார்த்தனை களும், அறப்போராட்டங்களும், அம்மா அவர்கள் நீதிக்கு அப்பாற்பட்டவர் என்பதற் காக அல்ல, அம்மா அவர்கள் குற்றத்திற்கு அப்பாற் பட்டவர் என்பததை தமிழக மக்கள் உணர்ந்திருந்த காரணத்தால் தான்.

அதுதான் உண்மை என்பதை பெங்களூரு உயர்நீதி மன்றமும் உறுதி செய்துள்ளது. கடந்த மாதம் மே 11-ல் வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கி தமிழக மக்களின் வயிற்றில் பாலை வார்த்தும், எதிர் கட்சிகளின் வயிற்றில் புளியைக் கரைத்தும் உள்ளது.

ஏழை, எளிய பாட்டாளி மக்களின் துயர் துடைப்பதே லட்சியமாக கொண்டு கடந்த 25 வருடங்களாக தன்னை மக்களின் வாழ்வாதாரத்திற்காக அர்பணித்துக் கொண்ட புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குறிப்பாக கடந்த மூன்றாண்டு கால ஆட்சியில் கடுமை யான உழைப்பு மற்றும் சீரிய சிந்தனை யோடு கொண்டு வரப்பட்ட திட்டங்கள் தான் அம்மா உணவகம். அம்மா மருந்தகம், அம்மா குடிநீர், அம்மா உப்பு, அம்மா மலிவு விலை அங்காடி மற்றும் ஏராளமான பெண்கள் நலத்திட்டங்கள் அனைவருக்கும் விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின்விசிறி மேலும் மாணவ, மாணவிகளுக்கு மிதிவண்டி, மடிக்கணினி கொடுத்தும், நலிந்தோருக்கு பசுமை இல்லங்கள் என ஏராளமான நலத்திட்டங்களை கொடுத்து இன்னும் பல நலத்திட்டங்களை தமிழக மக்களுக்கு வழங்க உள்ளார் அம்மா அவர்கள்.

மக்கள் முன்னேற்றத்திற்காக தன்னையே அர்பணித்துக் கொண்ட அம்மா அவர்கள் தன் மீது தொடுக்கப்பட்ட எத்தனையோ வழக்குகளை எதிர்த்து நின்று நீதிமன்றத்தில் தன்னை நிரபராதி என்று நிருபித் தது காட்டியவர். அதுபோலவே, தன் மீது தமிழக மக்கள் வைத்துள்ள நம்பிக்கை வீண் போகாது என்பதை நிருபிக்கும் வண்ணமாக பெங்களூரு சிறப்பு நீதிமன்றத்தின் தீர்ப்பு தவறானது என்று உயர்நீதிமன்ற மேல் முறையீட்டில் நிருபித்து தன்னை குற்றத்திற்கு அப்பார்பட்டவர் என்பதை உலகறிய மெய்படுத்தியுள்ளார்.

தருமத்தின் வாழ்வுதனை சூது கவ்வும். தருமம் மறுபடி வெல்லும் எனும் இயற்கை மருமத்தை அன்று கண்ணன் உலகுக்கு உணர்த்தினான். இன்று அம்மா அவர்கள் கட்டு ண்டார்கள், பொறுத்திருந்தார்கள், தருமம் வென்றதை உலகிற்கு உணர்த்தினார்கள்.

ஒரு பினீக்ஸ் பறவையாக அக்னி பரிட்சையில் வெற்றிகொண்ட புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இனி எக்காலத் திலும் தோல்வி என்பதே இல்லை.

**தர்மம் தலைகாக்கும், தர்மமே வெல்லும்.**

**- கே. பாலகிருஷ்ணன்**





# அதிகரிக்கும் செல்போன்கள்..!

## காவல்துறைக்கு ஒரு வேண்டுகோள்!

அறிவியல் துறையில் ஒவ்வொரு கண்டு பிடிப்பின்போதும் உலகில் பெரும் மாற்றத்தை கொண்டு வருகிறது. அதிலும் சில கண்டுபிடிப்புகள் மனித குலத்தின் வாழ்க்கையையே புரட்டிப் போட்டுள்ளது. குறிப்பாக இருசக்கர மற்றும் நான்கு சக்கர மற்றும் கனரக வாகனங்கள் உற்பத்தி பெருகி யதும் மனிதனின் பயணங்கள் மற்றும் சந்தைப்படுத்துதல் அதிசயத்தக்க வகையில் மாறியது. விமானங்கள் பறக்க தொடங்கியதும் உலகம் சுருங்கிவிட்டது என்ற கூறினார்கள்.

இவ்வாறாக ஒவ்வொரு கண்டுபிடிப் பின் போதும் மனிதனின் வாழ்க்கை முறையே மாறிவிடுகிறது. அந்த வகையில் தற்போது செல்போன்கள் எனப்படும் கைபேசி கள் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது. முன்பெல்லாம் வீட்டில் தொலைபேசி இருக்கும் நமக்கு குறைந்த பட்சம் 20 முதல் 30 பேர்களின் தொலைபேசி எண்களாவது ஞாபகத்தில் இருக்கும் மேலும் நூற்றுக்கணக்கான தொலைபேசி எண்கள் நம்முடைய தொலைபேசி டைரியில் எழுதி வைத்திருப்போம்.

நாம் தொடர்பு கொள்ள முயற்சிக்கும் உறவினரோ அல்லது நண்பரோ அவரது வீட்டிலோ அல்லது அலுவலகத்திலோ இருந்தால்தான் அவர்களுடன் பேச முடியும். அதிலும் தொலைதூர பயணங்களின் போது அவசர செய்திகளை தெரிவிப்பதென்றால் இயலாத காரியம். ஆனால் இப்போது நிலைமை தலைகீழாக மாறிவிட்டது.

உலகின் எந்த மூலையில் இருந்தாலும் எண்ணிய மாத்திரத்தில் அடுத்த நொடியே நமக்கு வேண்டியவரை தொடர்புக் கொள்ள முடியும். அதிலும் இப்போது உள்ள கைபேசி களில் உள்ள அம்சங்கள் பிரம்மிக்கதக்கதாக உள்ளது. இந்தியாவில் நகர்புறத்தில் 90 சதவீத பேர்களும் கிராமபுறங்களில் 70 சதவீத பேர்களும் கைபேசியை வைத்துள்ளனர்.

உலகிலேயே சீனாவிற்கு அடுத்த படியாக இந்தியாவில் தான் கைபேசி உபயோ

கிப்போர் அதிகம் உள்ளனர். இப்படிப்பட்ட அற்புதமான கைபேசியிலும் சில குறைகள் உண்டு. குறை கைபேசி கருவியில் அல்ல. கைபேசியால் ஏற்பட்டிருக்கும் குறை. சிறிய குறைகள் தான் சில சமயங்களில் பெரிய துன்பங்களை ஏற்படுத்தும். இதில் முக்கிய மானது நம்முடைய மிக முக்கியமான கைபேசி எண்களை கூட நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்வதில்லை என்பதுதான். நம் வீட்டில் உள்ளவர்கள் உறவினர்கள் நண்பர்கள் என்று அத்தனை பேருடைய கைபேசி எண்களையும் நம்முடைய கைபேசியில் சேமித்து வைத்திருப்போமே தவிர ஒருசில அவசிய மான கைபேசி எண்களை கூட நாம் மனதில் இருத்திக் கொள்வதில்லை. இதன் விளைவுகள் அச்சத்தை ஏற்படுத்துபவைதான்.

சமீபத்தில் என்னுடைய மகனும் அவனது நண்பர்களும் சென்னை மெரினா கடற்கரையில் உள்ள நீச்சல் குளத்திற்கு சென்றார்கள். உள்ளே செல்லும் முன் தங்களுடைய விலை உயர்ந்த கைபேசி மற்றும் மணிபர்ஸ்களை தன்னுடைய ஸ்கூட்டரின் சீட்டுக்கு அடியில் உள்ள பாக்ஸில் வைத்து பூட்டிவிட்டு சென்றுள்ளனர். பின்னர் சற்று நேரம் கழித்து வெளியே வந்து ஸ்கூட்டரில் வைத்த பொருட்களை எடுக்க பார்த்தபோது பாக்ஸ் திறக்கப்பட்டு அதிலிருந்த இரண்டு கைபேசிகளும் மணிபர்ஸ்சும் திருடப் பட்டுள்ளது தெரிய வந்தது.

உடனடியாக எனக்கு தகவல் கிடைத் ததும் மெரினா D-6 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். மூன்று மாதத்திற்கு பின்பு இரண்டு கைபேசிகளில் இன்ஸ்யூரன்ஸ் செய்யப்பட்ட கைபேசிக்கு “கண்டுபிடிக்க முடியவில்லை. என சான்றிதழ் கொடுத்தனர்.

இன்ஸ்யூரன்ஸ் செய்யப்படாத மற்றொரு கைபேசி கடினமான தேடலுக்குப் பின் கிடைத்ததாக காவல்துறை குற்றப்பிரிவு ஆய்வாளர் ஒப்படைத்தார். இன்ஸ்யூரன்ஸ் செய்யப்படாத கைபேசி எப்படி கிடைத்தது என்ற கேள்வி என் மனதில் ஏழாமலில்லை. ஆனால் கைபேசியின் விலைமதிப்பை விட அதில் சேமித்து வைத்துள்ள தகவல் தொடர்புகள் எவ்வளவு முக்கியம் என்பதை அனைவரும் அறிவர்.

**இன்னொரு சம்பவத்தையும் உங்களுடன் பகிரிந்துக் கொள்ள விரும்புகிறேன்.**

கடந்த மாதம் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் டிக்கெட் முன்பதிவு செய்ய சென்றிருந்தபோது ஒரு வட இந்திய பெண்மணி கவுண்டர் அருகில் தன் கைப்பையை வைத்துக்கொண்டு முன்பதிவு அலுவலரிடம் விசாரித்துக் கொண்டு இருந்தார்.



அப்போது திடீரென்று தன் கைப்பையை யாரோ ஒரு நபர் எடுத்துக் கொண்டு நகர்வதை கவனித்துவிட்ட அப்பெண்மணி கைப் பையை திருடிய நபரை ஒடிச் சென்று பிடித்து கண்டபடி இந்தியில் அழுது கொண்டே திட்டினார். பின்னர் அப்பெண்மணியை விசாரித்தபோது,

தன்னுடைய கைப் பையை திருடியவனிடம் பணத்தை வேண்டு மானால் எடுத்துக் கொள்

என் கைபேசி எனக்கு மிக முக்கியம் என்று கூறியதாக சொன்னார்.

மேலும் தன் கைபேசியில் தான் சந்திக்க வேண்டிய உறவினர்களுடைய கைபேசி தொலைபேசி எண்கள் இருப்பதாகவும் அவர்களின் விலாசம் கூட தன்னிடம் இல்லை யாதலால் தான் நிலை குலைந்து அழுது விட்டதாக கூறினார். எனவே அப்பெண் மணிக்கு பணத்தைவிட கைப்பேசி முக்கிய மானதாக இருந்தது.

இந்த அளவுக்கு முக்கியத்துவம் பெற்று விட்ட கைபேசி காணாமல் போனாலே திருடு போனாலோ அவ்வளவு சுலபமாபக கண்டு பிடிக்க முடியவில்லை. கைபேசியின் IMEI எண்ணை கொண்டு கண்டுபிடிக்கலாம் என்றால் இப்போது திருடப்பட்ட கைபேசி யின் IMEI எண்ணை டெக்னிக்கல் திருடர்கள் மாற்றிவிடுகிறார் களாம்.

எனவே காவல்துறையில் உள்ள சைபர் கிரைம்முடன் கைபேசி திருட்டை கண்டு பிடிக்க தனிப்பிரிவை ஏற்படுத்த வேண்டும் என்பது மக்களின் வேண்டுகோளாக உள்ளது.

**குறிப்பு :** கைபேசி வைத்திருக்கும் ஒவ்வொரு நபரும் பள்ளிக்கு செல்லும் மழலையரும் உட்பட அனைவரும் வெளியே செல்லும் போது தனக்கு உடனடியாக உதவிக்கு வரக் கூடியவர்களின் குறைந்தபட்சம் ஐந்து கைபேசி எண்களையாவது அச்சடித்தோ அல்லது எழுதியோ பத்திரமாக தன்னுடன் வைத்துக் கொள்ள வேண்டும். -D.ரவி




பேமிலி மேன் குறிப்பு வரைக என்று இன்டர்வியூவில் ஒரு கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு இப்படி பதில் எழுதியிருந்தார் திருமண மான ஒரு அனுபவ இளைஞன்.

கல்யாணத்திற்கு முன்பு தான் உண்டு தன் வேலை உண்டு என நிம்மதி யாக இருந்த மேன் (Man) திருமணம் ஆனப் பின்பு மனைவியை சமாளிக்க முடியாமல் "பேய்" முழி முழிக்கும் மேனை தான் "பேய் முழி மேன்" "பேய் முழி மேன்" என்று அழைக்ககாலப்போக்கில் அதுவே மருவி "பேமிலிமேன்" என்று ஆனது என்று எழுதினார். **எப்படி பதில் ?**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**கேர்ல் பிரண்ட் தன் பாய் பிரண்டுக்கு தன் வீட்டிற்கு வர வழி சொல்கிறார்.**

நேற்று என்னை இறக்கி விட்ட அப்பார்ட்மெண்டுக்கு வந்தவுடன் இடது பக்கம் லிப்ட் (Lift) இருக்கும் உள்ளே வந்து உன் முழங்கையால் 9-வது மாடி பட்டனை அமுத்து, லிப்டை விட்டு வெளி வந்து 9சி என்ற போர்ஷனின் காலிங் பெல் பட்டனை உன் முழங்கை யால் அமுத்து. நான் உடனே கதவை திறப்பேன் என்றாள்.

பாய்பிரண்ட் சந்தேகத்துடன் கேட்டான் "எல்லாம் சரி, எதற்கு எல்லா பட்டன்களையும் முழங்கையால் அமுத்த சொல்கிறாய் என்று கேட்டான் அதற்கு அவள் "அடப்பாவி நீ வெறுங்கையுடனா என் வீட்டிற்கு வருகிறாய்.

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

**மனைவி :** எனக்கு 58 வயதாகிறது. ஆனாலும் உங்கள் நண்பர் என்னை ஒரு மாதிரி செக்சியாக பார்க்கிறார்.

**கணவன் :** அது சங்கர் தானே,

**மனைவி :** எப்படி தெரியும்?

**கணவன் :** அவன் ஒரு ஸ்கிராப் டீலர்.



# ஆதார் அட்டை

உலக அளவில் ஒவ்வொருவரும் சட்டை காலரை தூக்கிவிட்டுக் கொள்ளும் அளவுக்கு மிடுக்கான சாதனையை ஓசை படாமல் இந்தியா சாதித்துள்ளது.

'ஆதார் அட்டை' என்ற விரல்கள் ரேகை, கண் அடையாள பதிவு திட்டம் மூலம் நாட்டில் உள்ள மக்களில் 82 கோடி பேரின் விவரங்களை ஒருங்கிணைந்த அடையாள அட்டை ஆணையம் (UDAI) பதிவு செய்து அதற்கான அட்டையை வழங்கியுள்ளது.

அமெரிக்காவின் மத்திய புலனாய்வு அமைப்பு (எப்.பி.ஐ.) அதனிடம் உள்ள புள்ளிவிவர ஆவண காப்பகத்தில் சுமார் 15 கோடி பேரின் விரல் கைரேகை அடையாளங்களை பதிவு செய்துள்ளது. இதுவே இதுவரையில் உலகில் அதிக அளவில் அடையாள அட்டை உள்ள அமைப்பாக இருந்தது. ஆனால், மக்களின் கைவிரல் ரேகை பதிவு அடையாள அட்டை (ஆதார்) வழங்கியது மூலம் இந்தியா புதிய அத்தியாயத்தை தொடங்கி உள்ளது.

கடந்த ஏப்ரல் 20ம் தேதி வரையிலான புள்ளி விவரத்தின் அடிப்படையில் நாட்டில் இதுவரையில் மொத்தம் 81.78 கோடி பேருக்கு (மக்கள் தொகையில் 67 சதவீதம்) ஆதார் அட்டை வழங்கப்பட்டுள்ளது.

29 மாநிலங்களில் உத்தரப் பிரதேசம் 10.48 கோடி பேருக்கு ஆதார் அட்டை வழங்கி முதலிடத்தைப் பெற்றுள்ளது. இரண்டாவது இடத்தில் 9.19 கோடி பேருடன் மகாராஷ்டிராவும், அடுத்ததாக 6.12 கோடி பேருடன் மேற்குவங்கமும் உள்ளது.

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சி காலத்தில் ஆதார் அட்டை வழங்கும் முறை முதன் முதலாக தொடங்கப்பட்டது. ஆனால், இதற்கு போதிய ஆதரவு இல்லாததால் பணி மந்தமாக நடந்தது. மேலும் அரசு நலத் திட்டங்களின் பயனைப் பெறுவதற்கு ஆதார் அட்டையை கட்டாயமாக்கக் கூடாது என்று உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியது. மக்களுக்கான சமூக நலத் திட்டங்களின் பயன்கள் உரியவர்களுக்கு நேரடியாக சென்று சேர்வதை உறுதி செய்யவும் முறைகேடுகளை தடுக்கவும் ஆதார் அட்டை பயனுள்ளதாக இருக்கும் என்ற அடிப்படையில் ஆதார் அட்டை வழங்கும் பணியை அரசு தொடர்ந்து மேற்கொண்டது.

மத்தியில் மோடி தலைமையிலான அரசு பதவியேற்றதும் சில அதிரடி முடிவுகளை எடுத்தது. சமையல் எரிவாயு நேரடி மானிய திட்டத்தை கொண்டு வந்து, அதனுடன் ஆதார் எண்ணை கட்டாய இணைப்புக்கு உட்படுத்தியது. அடுத்ததாக வாக்காளர் அடையாள அட்டையுடன், ஆதார் இணைக்கப்படுகிறது. இதன் மூலம் போலிகள் பெருமளவில் நீக்கப்பட்டுள்ளனர் என்பது மிகப்பெரிய சாதனை. நாட்டில் உள்ள எல்லா மக்களுக்கும் ஆதார் அட்டை வழங்கப்பட்டுவிட்டால், சமூக நலத் திட்டங்களின் பலன்கள் உரிய மக்களுக்கு நேரடியாக சென்று சேர்வதை உறுதி செய்ய முடியும். போலி என்ற பேச்சுக்கே இடம் இருக்காது.

மேலும், நாட்டில் உள்ள ஒவ்வொரு குடிமகனின் விவரமும் அரசிடம் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் குற்றவாளிகளையும் எளிதில் கண்டுபிடிக்க முடியும். தொடரட்டும் இந்த சப்தமில்லா சாதனை.

# தெலுங்கானாவால் சென்னைக்கு பாதிப்பு..?

தெலுங்கானா மாநிலம் ஆந்திரத்தில் இருந்து பிரிந்துவிட்டதால், ஸ்ரீசைலம் அணையில் நீர்ப்பங்கீட்டில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இது, சென்னையின் தாகத்தைத் தீர்க்க பேருதவி புரிந்துவரும் கிருஷ்ணா நீர்வரத்தை பாதிக்கக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

தெலுங்கானா - ஆந்திரா எல்லையில் அமைந்துள்ளது நீலம் சஞ்சீவரெட்டி சாகர் திட்டம் (ஸ்ரீசைலம் அணை). இங்கிருந்துதான் கிருஷ்ணா நதியின் வெள்ள நீர், சென்னைக்கு தெலுங்கு கங்கைக் கால்வாயில் திருப்பி விடப்படுகிறது. ஸ்ரீசைலம் அணையின் வலப்புறம் ஆந்திரத்துக்கும், இடதுபுறம் தெலுங்கானாவுக்கும் சொந்தம். இங்கு இருபுறமும் அமைந்துள்ள நீர்மின் திட்டம், இந்தியாவின் மிகப்பெரிய திட்டங்களில் ஒன்று.

ஆந்திரப் பகுதியில் 770 மெகாவாட் மின்னுற்பத்தித் திறன் கொண்ட மின் நிலையமும், தெலுங்கானா பகுதியில் மஹபூப்நகர் மாவட்டத்தில் அமைந்துள்ள இடது கரையில் 900 மெகா வாட் மின்னுற்பத்தி நிலையமும் உள்ளது. ஸ்ரீசைலம் அணையின் நீர் மட்டம் தற்போது குறைந்தபட்ச இருப்பு நிலையை விட கீழிறங்கிவிட்டது. கண்டலேறு அணையிலும் இதே நிலைமைதான். சோமசீலா அணையில் மட்டுமே ஓரளவு நீர் இருப்பு உள்ளது.

மேற்கண்ட அணைகளின் நீர் மட்டம், கடந்த ஆண்டு மே மாதம் 11-ம் தேதி நிலவரப்படி முறையே 53.18 டி.எம்.சி, 32.12 டி.எம்.சி, மற்றும் 18.63 டி.எம்.சி என ஒட்டு மொத்தமாக அவற்றில் 103.93 டிம்.எம்.சி நீர் இருப்பு இருந்தது. இந்த ஆண்டில் அதே தேதியில் அது சரி பாதியாக வீழ்ச்சியடைந் துள்ளது. மூன்று அணைகளிலும் உள்ள ஒட்டு மொத்த நீரின் அளவே 49.53 டி.எம்.சி தான் உள்ளது.

இந்த ஆண்டில் ஆந்திர மாநிலத்தின் மழைப் பொழிவில் வெகுவான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதுபற்றி தெலுங்கு கங்கை திட்டத்தின்





தலைமை பொறியாளர் எ.சுதாகர் "ஆந்திராவில் இந்த ஆண்டு பெய்த மழையின் அளவு கடந்த ஆண்டை விட 37 சதவீதம் குறைந்துள்ளது. தெலுங்கு கங்கை திட்டத்துக்கு உட்படாத மாவட்டங்களில் வறட்சி ஏற்கெனவே தொடங்கிவிட்டது. கடப்பா மாவட்டத்தில் பத்வேல் மண்டலத்தில் சில பகுதிகளிலும், நெல்லூர் மாவட்டத்தின் ஒரு சில பகுதிகளிலும் தண்ணீர் பஞ்சம் கடுமையாக உள்ளது." என்றார்.

ராயலசீமா மண்டலத்தின் முக்கிய நீராதாரம் என்பதால் இந்த அணையில் நீர் சேமிப்பை மேற்கொள்ள ஆந்திர அரசு முடிவு செய்தது. இதற்காக வலதுகரையில் மின் உற்பத்தியை நிறுத்தியது. ஆனால், தெலுங் கானாவில் மின் பற்றாக்குறை முக்கியப் பிரச்சனையாக எழுந்துள்ளது. எனவே அந்த அரசு, இடது கரையில் மின் உற்பத்தியைத் தொடர்ந்தது. 77 டி.எம்.சி நீரைப் பயன் படுத்தி 428 மில்லியன் யூனிட் மின்சாரம் தயாரித்தனர்.

இதனால், இரண்டு மாநிலங்களுக்கும் இடையே பிரச்சனை எழுந்துள்ளது. இப்பிரச்சனை கிருஷ்ணா நதிநீர் மேலாண்மை வாரியத்தின் ஜூலை மாதம் நடைபெற்ற முதல் கூட்டத்திலேயே எழுப்பப்பட்டபோதும் தீர்வு காண முடியவில்லை. இது தமிழகத்தின் நீர் வரத்தையும் பாதிக்கும் அபாயத்தை ஏற்படுத்தலாம்.

இதுபற்றி ஹைதராபாத் மத்திய பல்கலைகழகத்தின் ஓய்வுபெற்ற பேராசிரியர் ஹரகோபால் கூறியதாவது:

"மின்சாரமா, பாசனமா என்ற மோதல் இரு மாநிலங்களுக்குமிடையே நடக்கிறது. இந்த பிரச்னைகள் எதிர்பார்க்கப்பட்டது தான். இது குறித்து இரு மாநில முதல்வர்களும் அமர்ந்து பேசவேண்டும். ஆனால், முதல்வர்கள் மக்களை கவருவதையே நோக்கமாக கொண்டுள்ளனர். இனி வரும் காலங்களில், தெலுங்கானாவின் தேவைகளையும் பரிசீலித்து, தெலுங்கு கங்கை ஒப்பந்தத்தை அமலாக்க வேண்டும்.

சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவன பேராசிரியர் சிவசுப்பிரமணியைன் கூறும்போது:

"தேசிய நீர்க்கொள்கையின் அடிப் படையில் குடிநீருக்குத்தான் முன்னுரிமை அளிக்கப்படும். எனவே, தமிழ்நாட்டில் குடிநீர் தட்டுப்பாட்டைத் தடுக்க கிருஷ்ணா நீர் வேண்டுமென்று கேட்டால் அதனை யாரும் மறுக்க முடியாது."

### தெலுங்கானாவின் தலையீடு

சோமசீலா அணைக்கு சுற்றுலா வந்த திருப்பதியைச் சேர்ந்த ஹரி என்பவர், "வரும் காலங்களில் தெலுங்கானா அதிக அளவு தண்ணீரை ஒதுக்க சம்மதித்தால் மட்டுமே சென்னைக்குத் தண்ணீர் தருவது எளிதாக இருக்கும். வரும்காலத்தில் இதில் பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது என்றார். இதே கருத்தை பேராசிரியர் ஹரிகோபால் தெரிவித்திருந்தார். தண்ணீர் விநியோகத்தில் தெலங்கானாவின் தலையீடு பிரச்சினையை ஏற்படுத்தும் என்ற கருத்து சாதாரண பொதுமக்கள் வரையில் பரவிக்கிடக்கிறது.

### தலைநகர் அந்தஸ்தை சென்னை தக்கவைக்க உதவியதா கிருஷ்ணா?

சென்னைக்குக் கிருஷ்ணா நீர் வருவதற்கு முன்பாக, குடிநீர்த்தட்டுப்பாடு பெரும் பிரச்சினையாக இருந்தது. 1981-ம் ஆண்டுவாக்கில், சென்னையில் இருந்து தலைநகரினை திருச்சிக்கு மாற்ற முயற்சித்தார் அப்போதைய முதல்வர் எம்.ஜி.ஆர். திருச்சி - தஞ்சைக்கிடையே உள்ள பகுதியில் தலைமைச் செயலகத்தை அமைக்க இடமெல்லாம் பார்க்கப்பட்டது.

எம்.ஜி.ஆர். தங்குவதற்கு பங்களாவும் கட்டப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகின. மாநிலத்தின் மத்திய பகுதியில் தலைநகர் இருக்க வேண்டும் என்று அரசு கருதுவதாக ஒரு தகவல் பரவினாலும், குடிநீர்ப்பிரச்சினையும் முக்கிய காரணமாக அரசு கருதியது.

1981-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், மதுரையில் பேட்டி கொடுத்த, அப்போதைய வருவாய்த்துறை அமைச்சர் எஸ்.டி. சோமசுந்தரம், சென்னையில் குடிநீர் விநியோகம் பெரிய பிரச்சினையாக உருவெடுத்திருப்பதாகவும், ஆண்டொன்றுக்கு ரூ.400 கோடி (அப்போதைய மதிப்பில்) அதற்காக செலவாவதாகவும், அந்தத் தொகையில் புதிய தலைநகரையே நிர்மாணித்துவிடமுடியும் என்பதால், திருச்சிக்கு அருகே புதிய தலைநகரை நிர்மாணிக்க அரசு பரிசிலீத்து வருவதாகவும் அறிவித்தார்.

அரசின் திட்டத்தை எதிர்த்த எதிர்க்கட்சித் தலைவர் மு.கருணாநிதி, "இது மக்கள் பிரச்சினைகளை மறைக்க அரசு செய்யும் முயற்சி தலைநகரை மாற்ற முயன்றால் மக்கள் வீறு கொண்டு எழுவார்கள்," என்று கூறியிருந்தார்.

ஆனால், அடுத்த சில ஆண்டுகளில், ஆந்திரத்தில் எம்.ஜி.ஆரின் நண்பர் என்.டி.ராமராவ், ஆட்சியைப் பிடித்ததும், சென்னைக்குக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் 'தெலுங்கு கங்கை' உபாயம் கண்டறியப்பட்டது. அதற்கு பிறகு, தலைநகரை மாற்றும் பிரச்சினை கைவிடப்பட்டது. ஆனால், அதற்கான உண்மையான காரணம் தெரியவில்லை.

### அறிவுப்பூர்வமான நீர்மேலாண்மை அவசியம்:

தமிழகத்தில் போதிய அளவுக்கு மழைப்பொழிவு இருக்கிறது. ஆனால், மழைநீர் சேமிக்கும் பழக்கம் முழுமையாக இல்லை. மாரித் தண்ணீரை சேமிக்காதவர்களே, லாரித் தண்ணீரை நம்பி இருக்கிறார்கள். மழை நீரை சேமித்தால், ஓரிரு ஆண்டுகள் மழை பொய்த்தால்கூட நிலைமையைச் சமாளிக்க முடியும்.

உதாரணத்துக்கு, 10 ஆண்டுகளுக்கு முன்பு ரூ.30 ஆயிரம் செலவு செய்து லாரி தண்ணீர் வாங்கி பயன்படுத்தினோம். அதன்பிறகு மழைநீர் கட்டமைப்பை ஏற்படுத்தியதால், தற்போது ஒரு பைசா செலவின்றி, கைக்கெட்டும் தூரத்தில் தண்ணீர் கிடைக்கிறது. இந்த நிலை, சென்னை மட்டுமல்லாமல் தமிழ்நாடு முழுவதும் உருவாக வேண்டும்.

மழை நீரை முழுமையாக சேமித்துப் பயன்படுத்தினால், குடிநீருக்கு அண்டை மாநிலங்களில் கையேந்தும் நிலையைத் தவிர்க்கலாம். வீணாக கடலில் கலக்கும் வெள்ள நீரை சிறிய சிறிய நீர்த்தேக்கங்கள் மூலம் சேமிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கிடைக்கும் நீரை சிக்கனமாக செலவழிப்பது பற்றி ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும்.

காவிரி, முல்லைப் பெரியாறு, பாலாறு போன்றவற்றில் நமது உரிமைக்காகப் போராடும் நாம், நீர் மேலாண்மையை அறிவியல்பூர்வமாகச் செய்தால், உணர்வுப் பூர்வமாக சண்டையிட வேண்டிய நிலை ஏற்படாது. மழை நீர் சேகரிப்பும், நீரை சிக்கனமாகச் செலவிடுதல் உள்ளிட்ட நீர் மேலாண்மையுமே தண்ணீர் தட்டுப்பாட்டைப் போக்கும் வழிகளாகும் என்றார் தமிழிசை சவுந்தர்ராஜன்.

**கூட்டுறவு சமஷ்டிக்கு உதாரணம்:**

திமுக தலைமைக் கழக செய்தித் தொடர்பு செயலாளர் கே.எஸ்.ராதா கிருஷ்ணன் அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:-

இத்தொடரில், சென்னைக்கு கிருஷ்ணா நீர் வருவதை 1980-ம் கால கட்டத்திலிருந்து அதன் வரலாறு, தண்ணீர் வரும் தொழில்நுட்பம் ஆகியவற்றை சொல்லிவருவது மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

வாழ்த்துகள், பாராட்டுகள். அரிய பல தகவல்களுடன் ஆய்வுக்கட்டுரையைப் போல் உள்ளது கிருஷ்ணா நீர் சென்னைக்கு வர வேண்டுமென்று 1981 காலகட்டத்தில் சட்ட மன்ற உறுப்பினராக இருந்த பழ.நெடுமாறன், தி.சு.கிள்ளிவளவன், மணலி.ராமகிருஷ்ண முதலியார், எம்.கே.டி சுப்பிரமணியம், மாத்தூர் ராமசாமி நாயக்கர், நான் உட்பட இதைக் குறித்து அறியவும், தரவுகளைத் திரட்டவும் கிராமப் பகுதிகளுக்கெல்லாம் அலைந்து திரிந்து ஆய்வுகள் செய்தது நினைவுக்கு வருகிறது.

தண்ணீர் என்பது இயற்கையின் அற்புத அருட்கொடை. இந்த தண்ணீருக்காக எதிர்காலத்தில் உலக நாடுகளுக்குள்ளே உலகப் போர் மூளுமோ என்று விவாதங்கள் நடக்கின்ற வேளையிலும், தமிழகத்திடம் கர்நாடகமும், கேரளமும் வம்பு செய்யும் நிலையிலும், ஆந்திரம் தண்ணீர் தருவது ஒரு கூட்டுறவு சமஷ்டி முறைக்கு உதாரணமாகும். தமிழகத்தில், அரசியல் மனமாச்சர்யங்கள் கடந்து கிருஷ்ணா நீர் வரவேண்டும் என்று அனைவரும் விரும்பினர்.

கிருஷ்ணாவின் நீர் சென்னைக்கு தொய்வின்றி வரவேண்டுமென்ற நோக்கத்தில் தங்களுடைய தொடர் உள்ளது. சென்னை மக்கள் இப்பணிக்காக “தி இந்து” நாளிதழுக்கு நன்றிக்கடன் பட்டுள்ளனர். கிருஷ்ணா நீர் சென்னைக்கு தொய்வின்றி வரவேண்டுமென்ற நோக்கத்தில் தங்களுடைய தொடர் உள்ளது.

– ஆர். குணசேகரன்



# உணவுக்குப் பின் வெது வெதுப்பான தண்ணீரே சிறந்தது

சாப்பிட்டு முடித்த பின்னர் தண்ணீர் குடிப்பதில் பல கருத்துகள் நிலவுகிறது. நாம் உண்ணும் உணவு செரிமானமாவதற்கு உடலில் உள்ள சுரப்பிகள் சில என்சைம்கள், அமிலங்களை சுரக்கின்றது. ஆதலால் உணவு உண்ட பின்னர் 15அல்லது 20 நிமிடங்களுக்கு பின்னரே தண்ணீர் அருந்த வேண்டும் என்று அறிவுறுத்துகின்றனர் மருத்துவர்கள்.

உணவு உண்டபின்னர் இளம் சூடான நீர் அருந்துவது இதயத்திற்கு நல்லது என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இளம்சூடான தண்ணீர் அருந்துவதால் புற்றுநோய் செல்கள் உருவாவதை தடுக்கின்றதாம். சீனர்களும், ஜப்பானியர்களும், தவறாமல் இதனை பின்பற்றுகின்றனர். அவர்கள் உணவு உண்டபின்னர் சூடாக கிரீன் டீ, அல்லது வெதுவெதுப்பான வெந்நீர் அருந்தும் பழக்கத்தை கொண்டுள்ளனர். சூடான தண்ணீர் அருந்துவதால் உணவானது எளிதில் செரிமானமாவதோடு உடலுக்கு கெடுதல் ஏற்படுத்தும் கெட்டக் கொழுப்புக்களையும் தடுக்கிறது. எனவே சாப்பிட்டு முடித்ததும் இளம் சூடான சூப் அல்லது வெது வெதுப்பான தண்ணீர் குடிக்கலாம் என பரிந்துரைக்கின்றனர்.

# ஆன்லைனில் ஆர்டர் செய்கிறீர்களா..? உஷார்..!

**ஆர்லைனில் ஆர்டர் கொடுப்பது எளிது. ஆனால் எச்சரிக்கை அவசியம்.**

தற்போது ஆன்லைன் மூலம் பொருட்களுக்கு ஆர்டர் கொடுத்து வாங்குபர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஆன்லைனில் சில விஷயங்களில் கவனமாக இருக்க வேண்டும். அவை என்னென்ன என்று பார்க்கலாம்...

நீங்கள் ஆன்லைனில் ஆர்டர் செய்பவராக இருந்தால் நீங்கள் ஆர்டர் செய்யும் இணையதளம் நம்பகத் தன்மையானது தானா என்பதை முதலில் உறுதிபடுத்தி கொள்ளுங்கள். இல்லாவிட்டால் உங்கள் தகவல்கள் திருடப்படலாம். நீங்கள் வெளியே ஏதாவது ஓர் இணைய மையத்தில் இருந்து ஆர்டர் செய்பவராக இருந்தால் அங்கு ஸ்கிரீன் கேப்சரிங் தொழில்நுட்பம் அல்லது சில மென்பொருட்களை பயன் படுத்தியோ அல்லது கிரேடிட் கார்டு தவகல்கள் திருடப் படும் அபாயம் இருக்கிறது.

எனவே வெளி இணைய மையங்களை கூடியமட்டும் தவிர்த்திடுங்கள். சிலசமயம் மொபைல் ஆப்ஸ்களை பயன்படுத்தும்போது அதன் விதிமுறைகளை சரியாக படித்து பாருங்கள். சில ஆப்ஸ்கள் உங்கள் தகவல்களை பிற நிறுவனங்களுக்கு விற்று விடும். உங்கள் பர்சனல் தகவல்களான செல்போன் எண், ஈ-மெயில் ஐடி, கிரெடிட் கார்டு நம்பர் போன்ற தகவல்கள் இது போன்ற ஆப்ஸ்களால் பிறருக்கு அளிக்கப்பட வாய்ப்புகள் உள்ளன என்பதை உணருங்கள்.

நீங்கள் ஆர்டர் செய்யும் இணையதளம் இல்லது ஆப்ஸில் குறிப்பிடப்பட்டிருக்கும் நிபந்தனைகளையும் விதிமுறைகளையும் அவசியம் படித்து பாருங்கள். ஒருவேளை உங்கள் தகவல் திருடப்பட்டது என நீங்கள் புகார் கூறினால் கூட அதற்கு அவர்கள் ஏற்கனவே எங்கள் விதிமுறைகளை ஏற்று கொண்டிருக்கிறீர்கள் என்று கூறிவிடுவார்கள்.

நீங்கள் பொருள் வாங்கும் இணைய தளத்தில் இருந்து நிபந்தனைகள், விதிமுறைகளை படிக்கும் போது அவை திருப்திகரமான தாக இல்லையெனில் அந்த தளத்தில் ஆர்டர் செய்யாதீர்கள். அவசரம், அவசியம் என்றால் மட்டும் பிரவுசிங் சென்டருக்கு சென்று ஆர்டர் செய்யுங்கள். அதன்பின் உங்களுக்கு சந்தேகம் இருந்தால் உங்கள் பாஸ்வேர்டை உடனடியாக மாற்றி விடுங்கள்.

உங்கள் பிரவுசரில் நீங்கள் கடைசியாக பயன்படுத்திய இணையதளங்களின் பட்டியல், அதன் ஹிஸ்டரி பதிவில் இருக்கும். அதை டெலிட் செய்தால் உங்கள் பாஸ்வேர்டு, கிரெடிட் கார்டு நம்பர் ஆகியவை அழிக்கப் பட்டு விடும்.

**– ஆர். ராம்மோகன்**






# கல்விக் கடவுள்
# வித்யா விகாஸ்

அன்னசத்திரம் ஆயிரம் நாட்டல் ; ஆலயம் பதினாயிரம் நாட்டல் ; பின்னருள்ள தருமங்கள் யாவும் பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல். அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு கல்வி அறிவித்தல் என்ற மகாகவி பாரதியாரின் கூற்றுக்கு ஏற்ப கல்வித் தந்தைகள் டாக்டர் எஸ். குணசேகரன், டாக்டர் டி.ஓ. சிங்காரவேல், டாக்டர் எஸ், ராமலிங்கம், டாக்டர். எம். முத்துசாமி அவர்களால் துவக்கப்பட்ட வித்யா விகாஸ் நிறுவனம் விதையாய் ஊன்றி குறுகிய காலத்தில் ஆலமர விருட்சமாய் விழுதுகள் தோன்றி வேரூன்றி நிற்கிறது.

தனியார் பள்ளி, கல்லூரிகளிலேயே தரமானதாகவும் தலை சிறந்ததாகவும் தன்னிகரில்லாத தனித் தன்மையோடு விளங்குகிறது வித்யா விகாஸ் என்றால் அது மிகையில்லை. கல்வித் தரத்தில் மட்டுமல்ல...

ஒழுக்கம், நன்னடத்தை, விளையாட்டு, யோகா, அறிவியல், தொழில்நுட்பம், சமூக அக்கறை போன்றவற்றையும் மாணவ செல்வங்களுக்கு கற்றுத் தந்து அவர்களை பெற்றோர்களுக்கு இணையாக சற்றும் சளைக்காமல் மிகப்பெரிய நிலையில் ஆளாக்கி வருவதில் வித்யா விகாஸிற்கு நிகர் வித்யா விகாஸ்தான்.

**Walk in with your dreams....**
**Walk out with your future...**

என்பதை தாரக மந்திரமாக கொண்டு செயல்படும் ஒரே கல்வி நிறுவனம் இந்த வித்யா விகாஸ் நிறுவனம் மட்டுமே.

கல்வி பயிலும் மாணவர்களை நாசா விற்கு Study Tour அழைத்துச் சென்று சாதிக்கச் செய்ததைப்போல விரைவில் செயற்கைக் கோள்களில் பயணம் செய்து பிரபஞ்சத்தின் இயற்கைக் கோள்களையே ஆராய்ச்சி செய்யும்வகையில்உயர்வடையசெய்வார்கள் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இதுவரை ஆலமர விழுதுகளைப் போல் கிளை பரப்பிய வித்யா விகாஸ் நிறுவனம் இனி வரும் காலங்களில் வானில் காணும் நட்சத்திரங்களைப்போல பரந்து விரிந்து சிறந்திட வாழ்த்துகள்.

**தனிமனிதனின் வாழ்க்கையில் ஒழுக்கம் இருந்தால் நடத்தையில் அழகு மிளிரும்.**

**நடத்தையில் அழகு மிளிர்ந்தால் குடும்பத்தில் சாந்தி நிலவும்.**

**குடும்பத்தில் சாந்தி நிலவினால் நாட்டின் சீர்முறை பெருகும்.**

**நாட்டில் சீர்முறை பெருகினால் உலகத்தில் அமைதி நிலைக்கும்.**

என்கிற கவிதையை டாக்டர் அப்துல் கலாம் அவர்களால் வித்யா விகாஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருப்பது கல்விக் கடவுள் கலைவாணியே வழங்கியது போன்ற சான்று என்றால் சாலப்பொருந்தும்.





# சாதனையா..? நம்பிக்கையா..? மோடி

## ஓர் பார்வை...!

தலைப்பிலேயே ஓரளவுக்கு பதில் இருக்கிறது. அதாவது ஏமாற்றம் என்று பெரிதாக எதுவும் இல்லை. அதுவும் நம்பிக்கையா என்ற நினைப்பாலே பெறும் சாதனைதான். ஆனால் இந்த அளவில் இருப்பதற்கு காரணம் இதற்கு முந்தைய 10 ஆண்டுகால காங்கிரஸ் கூட்டணி அரசுதான். இதன் எதிரொலிதான் 542 இடங்களைக் கொண்ட 16வது பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் மே மாதம் 16ஆம் தேதி 2014 அன்று வெளிவந்ததில் பா.ஜ.க. மட்டும் தனியாக 282 இடங்களை கைப்பற்றினாலும் தன் கூட்டணி கட்சிகளுடன் 66 பேர் கொண்ட அமைச் சரவையை 15வது பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் 2014 மே மாதம் 26ஆம் தேதி சார்ப் நாடுகளின் தலைவர்களின் முன்னிலை யில் ஆர்ப்பாட்டமாக பதவியேற்றது.

இந்த தீர்ப்பு மக்களின் எதிர்பார்ப்புகளான ஊழலற்ற அரசு, வலைவாசி கட்டுப் படுத்துதல், நேர்மையாக பணி செய்வது, நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லுதல், கருப்புப் பணம் மீட்டுதல், கூட்டணி நிர்பந்தம் மற்றும் வாரிசு அரசியல் இல்லாத அரசு என்ற அடிப்படையில் எதிரொலித்தது எனலாம். அந்த வகையில் நரேந்திரமோடியின், 3 முறை தொடர்ந்து குஜராத் மாநிலத்தை சிறப்பாக ஊழலற்ற ஆட்சி செய்து வளர்ச்சி பாதையில் நடை போட வைத்து நிரூபித்த விஷயத்தில், அவர் பிரதமர் வேட்பாளராக களம் நிறுத்தப்பட்ட தினால் இந்த எதிர்ப்பு இன்னும் அதிகமாகி இவ்வளவு அசுர பலத்துடன் பாஜ,விற்கு வாய்ப்பு கிட்டியது.

சுதந்திர இந்தியாவில் காங்கிரஸ் 44 இடங்களை மட்டுமே பிடித்து பிரதான எதிர்கட்சி என்ற அந்தஸ்தையும் இழந்து படுதோல்வியுடன் கேவலமுற்றது. கம்யூனிஸ்டுகளைக் காணோம். ஜாதி,

மத அரசியல்வாதிகளான முலாயம், மாயாவதி, லல்லு மோடியை முதல் விரோதியாக பார்த்த நிதிஷ்குமார் போன்ற வர்கள் எல்லோரும் முடங்கிப் போயினர்.

**சரி இப்பொழுது ஓராண்டு நிறைவுற்றது. தற்போது மக்கள் மனநிலையைப் பார்ப்போம்.**

குறைந்த நிர்வாகிகள் நிறைந்த நிர்வாக குழு என்ற தாரக மந்திரம் உச்சரிப்பைத் தந்த மோடி, அதன்படி 66 அமைச்சர்களுடன் (மன்மோகன் அரசில் 77) தேவையில்லாத இலாக்காக்களை களைந்து விட்டு, கூட்டணி நிர்பந்தம் இல்லாமல் ஆட்சி செய்வது ஒரு சான்றாகும்.

அதே சமயம் நிர்வாகத்தில் காணப்படும் தொய்வுப் பணியை அதிரடியாக மாற்றி, அமைச்சர்களே காலை 9.00 மணிக்குள் அலுவலகம் வந்து எல்லா வேலைகளையும் துரிதப்படுத்தியதாக டெல்லி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதேபோல் வேலை சமயத்தில் வராண் டாவிலோ, கேண்டீன்களிலோ உலாவுவது எவ்வளவு பெரிய அதிகாரியாக இருந்தாலும், கண்டிக்கப்பட்டு அந்த பழக்கம் அடியோடு நிறுத்தப்பட்டுவிட்டது. மேலும். மிக உயர் பதவியான செயலக அந்தஸ்தில் இருக்கும் அதிகாரிகள் காலை நேரத்தை டெல்லி கோல்ப் மைதானத்தில் செலவிட்டு காலை 11 மணிக்கு அலுவலகம் வரும் முறை 100% நிறுத்தப் பட்டுள்ளது.

அவ்வப்பொழுது பணியாளர்கள் தங்கள் அலுவலகப்பணியில் இல்லாமல் வெளியில் இருந்தாலோ, லேட்டாக வந்தாலோ மெமோ கொடுக்கப்பட்டு எச்சரிக்கப்படு கிறார்கள். அனேகமாக இந்த நடைமுறை இந்தியாவின் எல்லா மத்திய அரசு அலுவலகங் களில் செயல்படுத்தப்படுகிறது.

**மக்கள் நலத்திட்டங்கள், வளர்ச்சி வாக்குறுதிகள் ஆகியவற்றில் மோடி அரசின் செயல்காடுகளைப் பார்ப்போம்.**

வளர்ச்சியைப் பொறுத்தவரை இந்த வருடம் வெறும் அடித்தளம் தான். ஆனால் மிக உறுதியாகப் போடப்பட்டிருக்கிறது. இதற்கு முன் நிலவர உண்மைகளைப் பார்க்கலாம்.

**முந்தைய பிரதமர்கள் வகித்த பதவி காலம்**

1, ஜவஹர்லால் நேரு – 16 வருடம் 286 நாட்கள்

2, இந்திரா காந்தி 15 வருடம் 91 நாட்கள்

3, நரசிம்ம ராவ் 4 வருடம் 11 நாட்கள்

4, மன்மோகன் சிங் 10 வருடம் 4 நாட்கள்

இது வெறும் காங்கிரஸ் அரசு மட்டும் தான். மற்ற பிரதமர்களான குஜ்ரால், வி.பி.சிங், தேவகௌடா, சந்திரசேகர், மொரார்ஜி காலங்கள் குறிப்பிடப்படவில்லை.

இந்த 57 வருட காங்கிரஸ் காலத்தில் கிடைக்க முடியாத “அச்சே தின்”(நல்ல நாள்) என்பது மோடியின் ஒரு வருட காலத்தில் கிடைக்கவில்லை என்று சொல்பவர்களுக்கு நரேந்திர மோடி, ஒன்றும் “மேஜிக் நிபுணர்” அல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

கிண்டலடிக்கும் விதமாக காங்கிரஸ் தலைகளான கபில்சிபில், கூறுகையில்,

மோடி என்.ஆர்.ஐ. (வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு) மட்டும் நேரத்தை செலவிடு கிறோம். ஆனால் ஆர்.ஐ. (ரெசிடென்ட் இந்தியர்) இந்தியர்களுக்கு ஒன்றும் செய்ய வில்லை என்கிறார். அவர்களின் இளவரசர் ராகுல் காந்தியோ, கோட், சூட், பூட் மோடி நிர்வாகம் விவசாயிகளை வஞ்சிக்கிறது என்கிறார். இதற்கு மோடி அவர்கள் ஆம் நாங்கள் கோட், சூட், பூட் நிர்வாகம்தான் ஆனால் சூட்கேஸ் நிர்வாகமல்ல என்று பதிலடி கொடுத்தார் என்பது வேறு விஷயம்.

இவர்கள் கூற்றுப்படி, வெளிநாட்டில் மோடி ஒன்றும் மரியாதைக் கடனாக, மற்ற பிதமர்களைப் போல் சுற்றுப்பயணம் செய்யவில்லை என்பதை கீழே பார்ப்போம்.

1. அமெரிக்காவையும், சீனாவிட மும் நல்லுறவு கொண்டு ஐ.நா. பாதுகாப்பு சபையில் இந்தியாவிற்கு நிரந்தர உறுப்பினர் பதவி கிடைக்க அரும்பாடு படுகிறார். எனென்றால் அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதே இவர்கள் தான்.



கட்டுதல் மற்றும் அதன் மூலம் பவர் பிராஜக்ட் இதிலும் பெரும் பங்கு இந்தியா விற்கு தரப்படும்.

9. வியட்நாம் நாட்டுடன் இருமுனை புரிந்துணர்வு ஒப்பந்தம், அங்குள்ள எண்ணை வளத்தை எடுப்பதற்காக நமது நாட்டு ஓ.என்.ஜி.எஸ். கம்பெனிக்கு கிடைத்தது.

10. இலங்கையின் "ஹம்பந்தோடா" துறைமுக கட்டுமானப் பணிபுரியும் அதை நிர்வகிக்கும் பொறுப்பும் இந்தியாவிற்கு மேலே கூறிய 4 ஒப்பந்தங் களும், சீனாவிற்கு போகவிருப்பதை தடுத்து நிறுத்தி நமக்கு திருப்பிவிடப்பட்ட மோடியின் செயலை பல நாட்டினரும் மற்றும் உள்நாட்டு நிபுணர்களும் வியந்து போற்றுகின்றனர்.

2, 35 மில்லியன் டாலர் ஜப்பான் முதலீடு 5 வருடம் காலத்திற்குள் நிறைவேற ஒப்பந்தம் அவர்களுடைய திறனாளுமையுடன்.

3, ஆஸ்திரேலியாவிடமிருந்து 500 டன், கனடாவிடமிருந்து 3000 டன் பிரான்ஸிடமிருந்து 800 டன் யுரேனியம் என நம் நாட்டு அணு உலைகளுக்காக ஒப்பந்தம். இதன் மூலம் நாடு முழுவதும் தடையில்லா மின்சாரம் கிடைக்க வழி செய்வது

4, மைக்ரோசாப்ட் நாதல்லா. பெப்சி இந்திரா நூயி, பேஸ்புக் ஹெரில் சாண்ட் பெர்க் மற்றும் மார்க் சூக்கர் பெர்க், அமேசான் கம்பெனி, ஜெப் பேசோஸ் போன்ற உலக மிகப் பிரம்மாண்ட வர்த்தக நிறுவனங்கள் இந்தியாவில் முதலீடு செய்ய நேரடி ஒப்பந்தம்.

5, கூட்டுக் கல்வி ஆராய்ச்சிக்கு 5 மில்லியன் டாலர் இஸ்ரேலிடம் ஒப்பந்தம்

6, சீனாவிடம் 20 பில்லியன் பிரான்ஸிடம் 2 பில்லியன் வர்த்தக முதலீட்டு ஒப்பந்தம்.

**இது தவிர நேரடி / மறைமுக பயன்கள்...**

7. சவுதி அரோபியாவிலிருந்து வாங்கும் கச்சா எண்ணெய்க்கு பிரிமியம் வரி விதிப்பிலிருந்து விலக்கு, இதன் மூலமாக அரசுக்கு பல ஆயிரம் கோடி ரூபாய் மிச்சம்.

8. பூடானில் 4 மிகப் பிரம்மாண்டமான "ஹைடிராலிக் பவர் பிராஜக்ட்" அமைத்து அதில் பெரும் பங்கு இந்தியாவிற்கு தரப்படும். நேபாளத்தில் உலகிலேயே மிகப் பெரிய அணை

11, அமெரிக்காவின் எதிர்ப்பை மீறி ஈரானிடமிருந்து கச்சா எண்ணை, நமது நாட்டு ரூபாயில் தொடர ஒப்பந்தம், இதன்மூலம் மிகப்பெரிய அந்நியச் செலாவணித் தொகை மிச்சமாகும்.

12. பலவீனமடைந்த ராணுவத் துறைக்கு, அமெரிக்கா, பிரான்ஸ் ஜெர்மனி போன்ற நாடுகளிலிருந்து நவீன தடவாளங்கள், கமிஷனோ, ஊழலோ இல்லாமல் பெற்றது.

13, குறிப்பாக "ஏபேல் மற்றும் ஏர்பஸ்" விமானத்திற்காக 400 மில்லியன் இருந்து 2 பில்லியன் யூரோவாக உயர்த்தி நம் நாட்டிலேயே உற்பத்தி செய்ய, பிரான்ஸிடம் ஒப்பந்தம்

மேலே குறிப்பிட்டவைகள் சிறு சாம்பிள்கள் தான். இந்த ஒப்பந்தங்கள் நிறைவேற்றுவதன் மூலம், இந்தியாவிற்கு தேவையான மின்சாரம், உள்கட்டமைப்பு, தொழிலில் வளர்ச்சி, வேலைவாய்ப்புகள் அதன் மூலம் மற்ற வியாபார விருத்திகள் கட்டாயம் கிடைக்கும்.

மோடி இவ்வளவு மகத்தான வேலைகளைச் செய்ய வெளிநாட்டில் எடுத்துக் கொண்ட நாட்கள் 51 (15 நாடுகள்) ஆனால்

காங்கிரஸ் இளவரசர் தன்னை பற்றி தெரிந்து கொள்வதற்கே ஒட்டளித்த மக்களுக்கு கூட சொல்லாமல் வெளி நாடுகளில் மறைந்த நாட்கள் 57.

**அடுத்ததாக வாக்குறுதிகள்**

வெளிநாடுகளில் இருந்து கருப்புப் பணம் மீட்பதில் மட்டும் உள்ளபடியே மோடி அரசு மிகவும் பின்வாங்கி விட்டதோ என்று அஞ்சப்படுகிறது. அந்த வகையில் ஒவ்வொறு இந்தியனுக்கும் சுமார் 15 லட்சம் வரை திரும்ப கிடைக்கும் என்று ஆசை காட்டிய வாக்குறுதி புஸ்ஸ். மிகவும் ஏமாற்றமே.





இருந்த போதும், இனிமேல் வெளிநாடு களில் கருப்பு பணத்தை பதுக்க முடியாத படி மிகக் கடுமையான சட்டம் கடந்த பாராளு மன்ற கூட்டத்தில் நிறைவேற்றியது சற்று ஆறுதலான விஷயம் மற்ற வாக்குதிகள் இன்னும் ஒரு வருடம் போகலாமே.

**மக்கள் நலத்திட்டங்கள்**

முந்தைய காங்கிரஸ்அரசால் முற்றிலும் புறக்கணிக்கப்பட்ட கிராம வளர்ச்சியினால் இந்திய பெருளாதாரம் சீரழிந்தது உண்மை என்றுணர்ந்த பா.ஜ.க கிராமங்கள் மற்றும் நகரங்கள் ஒருசேர முன்னேற்றப்பாதையில் கொண்டு சொல்ல முயற்சிக்கிறது.

சிறு, குறு தொழில் வளர்ச்சிக்கு உதவும் முத்ரா வங்கி திட்டம், அந்த சிறு முதலீட்டாளர்கள் குறுகிய கால கடனுக்காக கந்துவட்டிக் கும்பலிடம் சிக்காமல் வங்கி யிலேயே குறைந்த வட்டியில் கடன் பெறும் மிகச் சிறந்த திட்டம்.

காங்கிரஸ் ஆட்சியில் செய்த ஒரு நல்ல திட்டமான ஆதார அட்டையை சரியான வகையில் பயன்படுத்தி அதை வாக்காளர் அடையாள அட்டை வங்கிக் கணக்கு, கேஸ் இணைப்பு போன்றவற்றில் இணைக்க செய்து போலிகளை பெருமளவு களைந்து அரசின் மானியம் மக்களுக்கு நேரடியாக பெற வகை செய்தது சாதனைதான்.

நாட்டு மக்கள் அனைவருக்கும் வருடம் வெறும் ரூ. 12 பிரிமியத்தில் ஆயுள் காப்பீட்டு திட்டம் மற்றும் ரூபாய் ரூ. 300-க்கு விபத்துக் காப்பீட்டு திட்டம் என மத்தியரசே ஏற்று நடத்துதல். "சுவஸ்பாரத் என்றும்" தூய்மை இந்தியா திட்டம் ஆமை வேகத்தில் செயல்படுகிறது. ஆனால் இது பொதுமக்களின் பெருமளவு பங்களிப்பால் தான் வெற்றி அடையும்.

சுமார்ட் சிட்டி எனப்படும் பெரு நகரங்கள் தீர்மானிப்பது. கடற்கரை தளங்களை விரிவுப்படுத்துவது, சாலை மேம்பாட்டிற்காக புதிய திட்டங்கள் செயல்படுத்துவது போன்றவை முடக்கி விடப்பட்டுள்ளது. அதன் பயன் அடுத்த வருடம் ஒரளவு தெரிய வரும். அடுத்து கிராமங்களில் தொழில் கட்டமைப்பு பெருகினால் நகரத்திற்கு படையெடுப்பது பெருமளவு தடுக்கப்படும் என்ற நோக்கில் மோடி அரசு இரயில் திட்டங்களை விரிவு படுத்தியும், தொழில் தொடங்க தேவையான மற்ற வசதிகளையும் ஏற்படுத்தி தந்திருக்கிறது.



ஆனால் அது முழுமையாக நடைமுறைப்படுத்த நிலம் கையகப்படுத்துதல் மிக அவசியமாகிறது.

**இந்த நிலம் கையகப் படுத்துதல் பின்னணியை சுருக்கமாக பார்ப்போம்.**

1, முதல் நிலசுவான்தார்கள் நில ஒழிப்பு சட்டம் 1948ம் ஆண்டு சென்னை மாகாணத்தில் கொண்டு வரப்பட்டது. பின் 1951ல் ஒரியாவிலும், 1955 முதல் இந்தியாவின் மற்ற மாநிலங்களிலும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம் அன்றைய நாளில் கிட்டத்தட்ட இரண்டு கோடி பேர் நேரடி நேரடி (direct) நில உரிமையாளர்கள் ஆனார்கள். அதுபோல இந்த சட்டத்தின் மூலம் ரூபாய் 670 கோடி அன்றைய மதிப்பில் நில சுவான்தாரர்களுக்கு ( ஜமீன்தார்) நிவாரணம் கொடுக்கப்பட்டது.

பிறகு 1972ல் நில உச்சவரம்பு சட்டம் இயற்றப்பட்டது. இதில் தனி நபருக்கும் அதாவது கணவன், மனைவி மற்றும் குழந்தைகள் என்று கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டது. அதுவும் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறது.

அதன்பிறகு 1982ல் ஆறாவது திட்ட கமிட்டியின் மூலம் வேகப்படுத்தபட்டாலும் சட்டத்தின் ஓட்டைகள், அரசியல்வாதிகளின் லாப கணக்குகள் அதிகாரிகளின் லஞ்ச லாவன்யம் போன்றவற்றால் நீர்த்துப் போயிற்று. முதல் நிலம் கையகப்படுத்தும் சட்டம் 1984ல் இயற்றப்பட்டு பின் பல மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டது. இதன் மூலம் நில உரிமையாளர்களுக்கு மார்கெட் நிலவரப்படி நிவாரணம் அளிக்க வகை செய்யப்பட்டது.

பின் 2011ல் நிலம் கையகப்படுத்துதல் மறுவாழ்வு மற்றும் நிவாரணச்சட்டம் முந்தைய மன்மோகன் அரசால் The Land acquisition Rehabilitation and resettlement கொண்டு வரப்பட்டு, அப்போதைய எதிர் கட்சி பாஜக வால் அரைகுறையாக ஏற்கப்பட்டு பின் அரசியல் காரணங்களுக்காக திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்று எதிர்த்தது.

ஆனால் அதே பா.ஜ.க அரசு திருத்தப்பட்ட அந்த நிலம் கையகப்படுத்த சட்டம் 10.03.2015 அன்று லோக் சபாவில் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றி ராஜ்யசபா ஒப்புதலுக்காக காத்து இருக்கிறது.

ராஜ்ய சபாவில் தோல்வி ஏற்படும் என்றுணர்ந்து மறுபடியும் அவசர சட்டம் மூலமாக கொண்டு வந்து, தற்போது பார்லிமெண்ட் நிலைக் குழுவிற்கு அனுப்பி வைத்து, முடிவிற்காக காத்திருக்கிறது.

எப்படியானாலும் ராஜ்யசபாவில் காங்கிரஸ் ஒத்துழைக்க வில்லை என்றால் பார்லிமெண்ட் கூட்டத் தொடர் ( ராஜ்யசபா + லோக்சபா) ஏற்படுத்தி அந்த மசோதாவை சட்டமாக்கியே தீருவது என்று பா.ஜ.க. முயற்சி செய்து கொண்டிருக்கிறது.

எதிர்ப்பதற்கு ஒன்றும் பெரிதாக இல்லாததால். அற்ப அரசியல் காரணங்களுக்காக தான் கொண்டுவந்த அந்த சட்டத்தையே பா.ஜ.க. பெயர் வாங்கிவிடும் என்ற ஒரே காரணத்திற்காக விவசாயிகளுக்கு எதிரானது என்று அப்பட்டமாக பல்டியடித்து பா.ஜ.க.வை தவீரமாக காங்கிரஸ் எதிர்த்து களம் இறங்கி போராடுகிறது.

**சட்டத்தின் நிறைகள்**

நாட்டு மக்கள் எதிர்நோக்கும் வளர்ச்சியும் மோடியின் செயல்பாடுகளினால் வரப்போகும் இத்தனை முதலீடுகளுக்கும் ஆதாரமாக விளங்கும் இச்சட்டம் நிறை வேறினால் இந்தியப் பொருளதாரம் ஓஹோ என்று வளரும்.

நில உரிமையாளருக்கு மார்க்கெட் நிலவரப்படி நிவாரணமும், அவர்களது மறுவாழ்வுக்கான ஆதாரங்கள், அதாவது அங்கு அமையும் தொழில்துறையில் பங்கு அல்லது வேலை வாய்ப்பு வாழ்வாதாரத்திற்கான மாற்று இடங்கள் தருவது போன்றவற்றிற்கு உத்திரவாதம்.

தனியார் துறையினருக்கு நிலம் கொடுக்கப்படவேண்டிய சமயத்தில் மொத்த இடத்தில் 80% நில உரிமையாளர்கள் அதற்கு ஒப்புதல் தர வேண்டும்.

கிராமங்கள் அதைச் சுற்றியுள்ள இடங்கள் பெருமளவு வளர்ச்சியுறும் வேலை வாய்ப்பு பெருகும். தனிநபர் வருமானம் கூடும். இதனால் சட்டம் ஒழுங்கும் சீராகும்.

**குறைகள்**

நிலம் கையகப்படுத்தும்போது. உள்ளூர் அரசு சார்ந்த அமைப்புகள் அதாவது வி.ஏ.ஓ., தாசில்தார் போன்றோரின் கருத்துக் களை உதாசீனம் செய்யும் உரிமை மத்திய அரசிற்கு உள்ளது.

இரண்டாவது, நில அமைப்புகளின் தொகுப்பு மாறும்போது அதன் விளைவாக ஏற்படும் சமுதாயம் சார்ந்த பொருளாதார (Socio- Economy) மாற்றங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

உதாரணத்திற்கு நெசவுத் தொழில் கட்டமைப்புக்கு நிலம் கையகப்படுத்தப்பட் டால் அதை நம்பியிருக்கும் மற்ற தொழில் களான மூலப் பொருட்களின் (சாயம், கெமிக் கல்) போன்ற வியாபாரங்களும் அடிபடும். அந்த பாதிப்பை அரசு கவனத்தில் கொள்ளது,

ஆனால், ஒரு புதிய முயற்சி செய்யும் போது, நில குறைகள், நஷ்டங்கள் இருக்கத் தான் செய்யும். இந்தச் சேதாரத்தை பொருட் படுத்த வேண்டாம் என்றாலும் பெருமளவு குறைக்கப்பட வேண்டும்.

**தவிர்க்கப்பட வேண்டியவை**


இந்துத்துவா சம்பந்தப்பட்ட ஊழல்கள், சாத்வி பிரயாக் என்ற பெண் சாமியார், எம்.பி., சாக்னி மகராஜ் எம்.பி,. என்ற ஆன் சாமியார், பிரவின் தொகாடியா, வினய் கட்டியார் போன்ற இந்துத்துவா பெரிய மனிதர்கள் தங்களது எல்லா ஓட்டைகளையும் மூட மோடி எச்சரிக்க வேண்டும்.

**சறுக்கல்கள்**

ஜம்மு - காஷ்மீர் அரசு அதிகாரத்திற்காக அப்பட்டமாக பிரிவினைவாதிகளுக்கு ஆதரவு தரும் முப்தி முகமது சயீத் ஆட்சிக்கு ஆதரவு கொடுப்பது இந்திய இறையாண்மைக்கு விடப்படும் சவாலுக்கு பா.ஜ.க. பதில் சொல்ல வேண்டி இருக்கும். இன்னும் நிறைய உள்ளது. மொத்தத்தில் பார்த்தால் மோடி அரசு பாஸ் மார்க் அவ்வளவுதான். இன்னும் எதிர்பார்க்கலாம்.

**மோடி அரசு நடத்துவது ஒருநாள் 50 ஓவர் கிரிக்கெட். ஆனால் மக்கள் எதிர்பார்ப்பது 20+20 ஓவர் கிரிக்கெட்.**

– பி. வீரராகவன்



# கில்லராக மாறிய கமல்?

கமல் தனது உதவியாளர் ராஜேஷ் செல்வம் இயக்கத்தில் 'தூங்காவனம்' என்ற படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டுள்ளார். இந்த படத்தில் கமலுக்கு ஜோடியாக திரிஷா நடிக்கவிருக்கிறார். மேலும், பிரகாஷ் ராஜ், மனிஷா கொய்ராலா, அனைகா ஷோதி, உமா ரியாஸ் உள்ளிட்டோரும் நடிக்கின்றனர்.

இந்நிலையில், இப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர்கள் இன்று வெளியாகியுள்ளது. ஒரு போஸ்டரில் கமல் ரொம்புவும் இளமையாகவும், முகத்தில் தாடி, கையில் ஒரு துப்பாக்கி, இடுப்பில் ஒரு துப்பாக்கியை சொருகிக்கொண்டு வருவதுபோன்றும் இடம்பெற்றுள்ளது.

மற்றொரு போஸ்டரில் ஒரு பெண்ணை ஒரு கையால் கட்டிப்பிடித்துக் கொண்டு, மற்றொரு கையில் துப்பாக்கியை வைத்து அந்த பெண்ணை சுடுவதுபோன்றும் வடிவமைத்துள்ளனர்.

இந்த போஸ்டர்களை வைத்து பார்க்கும்போது, இந்த படத்தில் கமல் 'சிவப்பு ரோஜாக்கள்' படத்தில் இடம்பெற்ற சைக்கோ கில்லர் மாதிரியான கதாபாத்திரத்தில் நடிக்கிறாரோ? என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இருப்பினும், இந்த படத்தில் கமல் எந்தமாதிரியான கதாபாத்திரத்தில் வருகிறார் என்பது கூடிய விரைவில் தெரிய வரும்.



## ஆர்யா

பேய் படங்களுக்கு ரசிகர்கள் மத்தியில் வரவேற்பு உள்ளது. இப்படங்கள் வெற்றிகரமாக ஓடி வசூல் குவிக்கின்றன. இதையடுத்து முன்னணி கதாநாயகர்களும் பேய் படங்களில் நடிக்க துவங்கியுள்ளனர்.

இதையடுத்து ஆர்யாவும் பேய் படத்தில் நடிக்கிறார். இந்த படத்தை ஜீவா சங்கர் இயக்குகிறார். இவர் ஏற்கனவே ஆர்யாவின் தம்பியை வைத்து 'அமர காவியம்' படத்தை எடுத்தவர். அவர் சொன்ன பேய் கதை பிடித்து போனதால் ஆர்யா நடிக்க ஒப்புக் கொண்டாராம். இதில் அவர் பேய் கேரக்டரில் நடிக்க இருப்பதாக கூறப்படுகிறது.

ஆர்யா தற்போது 'வாசுவும் சரவணனும் ஒண்ணா படிச்சவங்க', 'யட்சன்', 'இஞ்சி இடுப்பழகி', போன்ற படங்களில் நடித்து வருகிறார்.



## கார்த்தி

'கொம்பன்' படத்திற்குப் பிறகு கார்த்தி தற்போது 'இதற்குத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா' என்ற படத்தை இயக்கிய கோகுல் இயக்கத்தில் 'காஷ்மோரா' படத்தில் நடித்து வருகிறார்.

இதில் கார்த்திக்கு ஜோடியாக நயன்தாரா, ஸ்ரீதிவ்யா என இரண்டு பேர் நடித்து வருகிறாரக்ள். இப்படத்தை ட்ரீம் வாரியர்ஸ் நிறுவனம் தயாரித்து வருகிறது.

இப்படத்தில் இந்திய அளவில் முதல் முறையாக இப்படத்தில் புதிய டெக்னாலஜி ஒன்றை அறிமுகப்படுத்த இருக்கிறார்கள். இப்படத்தில் இடம்பெறும் குறிப்பிட்ட சில காட்சிகளைப் படமாக்குவதற்காக 360 டிகிரிகள் சுழலும் 'ஆம்னி டைரக்ஷனல்' கேமரா ரிக் ஒன்றை பயன்படுத்தி யிருக்கிறார்கள்.

முதலில் இப்படத்தில் இடம் பெறும் குறிப்பிட்ட காட்சிகளை படமாக்க முடியாது என்று நினைத்து அந்த காட்சிகளுக்கு கம்ப்யூட்டர் கிராபிக்ஸ் செய்து கொள்ளலாம் என திட்டமிட்டி ருந்தனர்.

பின்னர் 360 டிகிரிகள் சுழலும் கேமரா டெக்னிக் பற்றித் தெரிந்ததும் அந்த டெக் னாலஜியை இந்தியாவிலேயே முதல்முறையாக இப்படத்தில் அறிமுகப்படுத்தி உள்ளனர்.



# அஜித்

அஜித் தற்போது சிறுத்தை சிவா இயக்கும் 'தல 56' படப்பிடிப்பில் பிசியாக நடித்து வருகிறார். இந்த படப்பிடிப்பு சென்னைக்கு அருகில் பிரம்மாண்ட அரங்குகள் அமைத்து நடந்து வருகிறது.

இந்நிலையில், இப்படப்பிடிப்பின் போது கிடைத்த இடைவெளியில் அஜித், தனது படக்குழுவினருடன் கிரிக்கெட் விளையாடி மகிழ்ந்தார்.

அஜித் ஒரு சிறந்த கார் பந்தய வீரர் என்பது அனைவருக்கும் தெரிந்ததே. அதேபோல், சிறந்த பைக் ரைடரும் கூட. விளையாட்டின் மீது மிகுந்த ஆர்வம் கொண்ட அஜித், நேரம் கிடைக்கும்போதெல்லாம் தனக்கு பிடித்தமான விளையாட்டுக்களை விளையாடி மகிழ்ந்து வருகிறார்.

இந்நிலையில் தல 56 படக்குழுவினருடன் அஜித் கிரிக்கெட் விளையாடி மகிழ்ந்தது அவர்களுக்கு மிகுந்த ஆச்சர்யத்தை கொடுத்தது. 'தல 56' படத்தில் அஜித்துக்கு ஜோடியாக ஸ்ருதிஹாசன் நடிக்கிறார்.

அஜித்தின் தங்கையாக லட்சுமி மேனன் நடித்து வருகிறார். இப்படத்தில் அனிருத் இசையமைத்து வருகிறார். இப்படத்தை வரும் தீபாவளிக்கு வெளியிட முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது.



# அப்பாவாக நடிக்கும் விஜய்

விஜய் தற்போது சிம்புதேவன் இயக்கும் 'புலி' படத்தின் இறுதிக்கட்ட பணிகளில் பிசியாக இருந்து வருகிறார். இப்படத்தை தொடர்ந்து அட்லி இயக்கும் புதிய படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். இப்படத்தில் இவருக்கு ஜோடியாக சமந்தாவும், எமி ஜாக்சனும் நடிக்கவிருப்பதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், கத்தி படத்திற்கு இந்த படத்திலும் விஜய் இரட்டை வேடத்தில் நடிக்கவிருக்கிறார். இதில் ஒரு வேடமாக காக்கி யூனிபார்ம் அணிந்து போலீஸ் வேடத்தில் நடிக்கவிருக்கிறார். மற்றொரு வேடத்தை ரகசியமாக வைத்திருந்தனர். தற்போது, மற்றொரு வேடம் என்னவென்பதும் வெளியாகியுள்ளது.

அதாவது, விஜய் இதில் அப்பா வேடத்தில் நடிக்கப் போவதாக செய்திகள் வெளிவந்துள்ளது. முதன்முறையாக ஒரு படம் முழுவதும் விஜய் அப்பா வேடமேற்பது இதுவே முதல்முறை என்றும் கூறப்படுகிறது.

இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கவிருக்கிறார். கலைப்புலி எஸ்.தாணு பிரம்மாண்டமாக தயாரிக்கவிருக்கிறார். படத்தின் படப்பிடிப்பை ஜூன் மாதம் நடுவில் தொடங்கவிருக்கின்றனர்.

# டாக்சி டிரைவராக நடிக்கும் சுருதிஹாசன்



அஜித் தற்போது சிறுத்தை சிவா இயக்கத்தில் நடித்து வருகிறார். இதில் அஜித்துக்கு ஜோடியாக சுருதிஹாசன் நடித்து வருகிறார். மேலும் அஜித்துக்கு தங்கையாக லட்சுமி மேனன் நடித்து வருகிறார். இப்படத்திற்கு அனிருத் இசையமைத்து வருகிறார்.

இப்படத்தின் படப்பிடிப்பு சமீபத்தில் பின்னி மில்லில் தொடங்கியது. பின்னர் நாவலூர், பழைய மகாபலிபுரம் சாலை ஆகிய இடங்களில் படப்பிடிப்பு நடத்தினர். இதில் அஜித் மற்றும் லட்சுமி மேனன் சம்மந்தப்பட்ட காட்சிகளை படமாக்கினார்கள். இதன் புகைப்படங்கள் இணைய தளத்தில் வெளியானது. இப்படத்தில் அஜித் டாக்சி டிரைவராக நடிப்பதாகவும், பாட்ஷா படத்தின் ரீமேக் என்றும் செய்திகள் வந்த வண்ணம் உள்ளது. ஆனால், அஜித் டாக்சி டிரைவர் இல்லை என்றும், சுருதிஹாசன்தான் டாக்சி டிரைவராக நடிக்கிறார் என்றும் தற்போது செய்திகள் வெளியாகி வருகிறது.

இப்படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பு முடிந்துள்ளது. அடுத்தகட்ட படப்பிடிப்பு அடுத்த வாரம் தொடங்கவுள்ளது. இதில் அஜித், சுருதி ஹாசன் சம்பந்தப்பட்ட காட்சிகளை படமாக்க திட்டமிட்டுள்ளனர்.



# தயக்கம் சாதனைகளை தகர்க்கும்...



நீல் ஆம்ஸ்ட்ராங்... இவர் தான் நிலவில் முதன் முதலில் கால் வைத்தவர்... ஆனால், முதன் முதலில் வைத்திருக்க வேண்டியவர் யார் தெரியுமா?... பல பேருக்கு தெரியாது...

எட்வின் சி ஆல்ட்ரின்... இவர் தான் நிலவுக்கு சென்ற அப்பல்லோ விண்கலத்தின் பைலட், அதாவது விமானி ஆல்ட்ரின் அமெரிக்காவின் விமானப் படையில் பணிபுரிந்தவர். மேலும் விண் நடை அனுபவம் உள்ளவர். அதனால் அவர் பைலட்டாக நியமிக்கப்பட்டார்.

நீல் ஆம்ஸ்ட்ராங்க் அமெரிக்காவின் கப்பல் படையில் வேலைபார்த்தவர். மிகுந்த தைரியசாலி என்பதால்தான் இந்த பயணத் திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் கோ-பைலட் அதாவது இணை விமானி. இவர்கள் சென்ற அப்பல்லோ விண்கலம் நிலவை அடைந்ததும் நாசாவிலிருந்து, "பைலட் பர்ஸ்ட்". என்று கட்டளை பிறப்பிக்கப் பட்டது. ஆனால், ஆல்ட்ரினுக்கோ மனதில் சின்ன தயக்கம்.

இடது காலை எடுத்து வைப்பதா?... வலது காலை எடுத்து வைப்பதா? என்றல்ல... "'நிலவில் முதன் முதலில் கால் எடுத்து வைக்கிறோம். புவியீர்ப்பு விசையற்ற இடத்தில் இருக்கிறோம். கால் வைக்கும் இடம் எப்படி இருக்கும் என்று தெரியாது.


புதை மணலாக இருந்து உள்ளே இழுத்து விட்டால், எரி மணலாக இருந்து காலை சுட்டுவிட்டால்'" தயக்கத்தில் மணிக்கணக்காக தாமதிக்கவில்லை. சில நொடிகள்தான் தாமதித்திருப்பார். அதற்குள் நாசாவில் இருந்து இரண்டாவது கட்டளை பிறப்பிக்கப்பட்டது, "கோ-பைலட் நெக்ஸ்ட்" நீல் ஆம்ஸ்ட்ராங் கட்டளை வந்த அடுத்த நொடி காலடி எடுத்துவைத்தார் உலக வரலாறு ஆனார்.

உலக வரலாறு, ஒரு நொடி தயக்கத்தில் மாற்றி எழுதப்பட்டது. திறமையும் தகுதியும்

இருந்தும்கூட தயக்கத்தின்காரணமாக தாமதித்ததால் இன்று ஆல்ட்ரினை யாருக்கும் தெரியவில்லை.

முதலாவது வருபவரைத்தான் இந்த உலகம் நினைவில் வைத்திருக்கும் என்பது மட்டுமல்ல. தயக்கம், பயம் இவை எந்த அளவுக்கு நம் வெற்றியை பாதிக்கும் என்பதற்கு இதுவே உதாரணம்.. இனி நிலவை பார்க்கும்போதெல்லாம் இந்தச் சம்பவத்தை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஒரு நிமிடத் தயக்கம் நம்முடைய மிகப் பெரிய வெற்றிகளைத் தடுத்துவிடுகிறது..

நாம் எல்லோருமே மிகப்பெரும் சாதனைகளை படைக்கிற வல்லமை உடையவர்கள்தான். நம்முடைய தயக்கம், பயம், கூச்சம் இவைதான் நம் முதல் எதிரி பலருக்கு தன்னுடைய தவறுகளை களைவதில்




தயக்கம். தவறுகளை தட்டிக் கேட்க தயக்கம். அடுத்தவர்களை பாராட்டுவதில் தயக்கம். ஏன், சிலருக்கு இந்த தகவலை நண்பர்களுக்கு பகிர கூட தயக்கம். சரியானதை செய்ய தயங்கினால், தவறானதை தான் செய்ய கொண்டிருப்போம். எனவே, நல்ல விஷயங்களில் தயக்கத்தை தவிர்ப்போம் தலைநிமிர்ந்து நிற்போம்.

# ராஜினாமா கடிதத்தை ரெடிய்யா வையுங்க
# சுப்ரமணியசுவாமி கிண்டல்



சொத்து குவிப்பு வழக்கில் ஜெயலலிதா விடுதலையை எதிர்த்து உச்ச நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்ய இருப்பதாகவும் ஜெயலலிதா தமது ராஜினாமா கடிதத்தை தயாராக வைத்திருக்க வேண்டும் என்றும் பாரதிய ஜனதாவின் சுப்பிரமணியன் சுவாமி கூறியுள்ளார்.

வருமானத்துக்கு அதிகமாக சொத்து குவித்த வழக்கில் ஜெயலலிதா விடுதலை செய்யப்பட்டார். இதனைத் தொடர்ந்து அவர் தமிழக முதல்வராகப் பதவியேற்றுக் கொண்டார்.

ஜெயலலிதா விடுதலையை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வது குறித்து கர்நாடகா அரசு எந்த ஒரு முடிவும் எடுக்காமல் இருக்கிறது. அதே நேரத்தில் ஜெயலலிதா விடுதலையை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்யப் போவதாக திமுக அறிவித்துள்ளது.

இதேபோல் ஜெயலலிதா உள்ளிட்டோர் விடுதலை செய்யப் பட்டதை எதிர்த்து உச்சநீதி மன்றத் தில் மேல்முறையீடு செய்யப் போவதாக சுப்பிரமணியன் சுவாமி கூறியுள்ளார்.

மேலும் இந்த விஷயத்தில் கர்நாடக அரசின் முடிவுக்காக காத்திருக்கப்போவ தாகவும், அதன்பிறகு மேல்முறையீடு செய்வது குறித்து தான் முடிவு செய்ய இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதனிடையே தமது ட்விட்டர் பக்கத்தில், "என்.டி.டி.வி. இணையதளத்தில் சீனிவாசன் ஜெயின் ஜெயலலிதாவை விடுதலை செய்த கர்நாடகா உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை கிழிகிழி என கிழித்துவிட்டார்.. ஜெயலலிதா உங்க ராஜினாமா கடிதத்தை தயாராக வையுங்க" என்றும் சுப்பிரமணியன் சுவாமி பதிவிட்டுள்ளார்.



# புதிதாக உருவாகும் வேலை வாய்ப்புகள்!

ஃபேப் இந்தியா என்ற முன்னணி நிறுவனம் 11.2 மில்லியன் மீட்டர் கைத்தறித் துணி வகைகளை மாதம் ஒன்றுக்கு வாங்குகிறது. இதன் மதிப்பு ரூ. 112 கோடி. இதனால் ஒரு லட்சம் மனித வேலை நாட்களுக்கான வேலை கிடைக்கப்பெற்று 86,000 வேலைவாய்ப்புகள் புதிதாக உருவாகியுள்ளன.

விசைத்தறியில் 24 லட்சம் மீட்டர் துணி வகைகளைத் தயாரிக்க வெறும் 34 வேலை வாய்ப்புகளே உருவாகின்றன என்ற புள்ளி விவரங்களை ஒப்பிட்டுப் பார்த்தால் கைத் தறியால் பெருகிவரும் வேலை வாய்ப்புகள் தெளிவாகத் தெரிய வரும்.

கைத்தறி ஆடைகள் உற்பத்தி தொடக்க நிலையிலிருந்து விற்பனை நிலை வரை அதாவது நெசவு நெய்வதற்கு முந்தைய நிலையிலிருந்து நெய்து முடித்து அடுத்த நிலை வரை சுமார் 2 கோடி உழைப்பாளர்கள் பங்கேற்றுப் பயன் பெற்றுவருகின்றனர்.

விஞ்ஞானப் புரட்சியாகக் கருதப்படும் தகவல் தொழில்நுட்பத் துறையில் மொத்தமே 30 லட்சம் தொழிற்பயனாளிகள் மட்டுமே உள்ளனர் என்ற உண்மையுடன் இக்கூற்றை ஒப்பிட்டுப் பார்த்தால் கைத்தறித் தொழிலின் இன்றியமையாமை விளங்கும்.

உலகளவில் இயற்கைக்கு ஊறு விளை விக்காத, பல்வேறு வண்ண, வடிவங்களில் கலைநயம் மிளிரும் கைத்தறிப் படைப்புகளை இந்தியா வழங்கிவருவதால் உலக நுகர்வோர் இந்திய கைத்தறிச் சந்தையை எதிர்நோக்கி யுள்ளனர். உண்மை நிலை இவ்வாறிருக்க கைத்தறி நெசவுத் துறையில் முதலீட்டைப் பெருக்கு வதற்குப் பதிலாக அந்த பெருமை மிகு துறையை அழிக்க நினைப்பது புத்தி சாலித்தனம் அல்ல.

இத்தனைக்கும் மேலாக தற்போதுள்ள கைத்தறிப் பாதுகாப்புச்சட்டம் வலுவிழந்த சொத்தைப் பற்களைப் போல்தான் இருக்கிறது.

# அதிகரிக்கும் வேலை வாய்ப்பில்லா பட்டதாரிகள்...





மிக அரிதாக மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனைச் செயலிழக்கச் செய்து ரத்து செய்வதற்கு மாறாக வலிமைமிக்க கூரிய பற்களுடன் கூடிய சட்டமாக இது திருத்தம் செய்யப்பட வேண்டும்.

‘தஸ்த்கர்’ ஆடை அங்காடிக்கு கைத்தறி ஆடை அணிந்து வந்த 80 வயது மணிப்பூர் மூதாட்டியிடம் “இந்த கைத்தறி ஆடைகளைக் குளிர்காலத்தில் அணியும் போது குளிராக இருக்காதா?” என்று கேட்ட போது “இதை என் கைகளாலேயே நான் நெய்தேன். என் தாயும் என் சகோதரிகளும் என்னுடன் சேர்ந்து நெய்தனர். என் தாய் அவரது தாயாரிடமிருந்தும், என் பாட்டி அவரது தாயாரிடமிருந்தும் வழிவழியாகக் கற்றுத்தேர்ந்ததுதான் இந்த நெசவுக் கலை. பல கைகளின் சூடு இதில் ஏறியிருக்கிறது. என் குடும்பத்தினரின் பல தலைமுறைகளைச் சேர்ந்த பெண்கள் இந்த ஆடையின் வடிவில் என்னைப் போர்த்தியிருக்கின்றனர்.

எனக்கு எப்படிக் குளிரும்?” என்று அவர் கேட்டார். கைத்தறிக் கலை, காலத்தை வென்று வாழ்ந்து வளர்ந்து வரும் முறையை இது விளக்குகிறது.

இந்தியாவின் கைத்தறி நெசவுத் தொழில், வளமான உலகப் பொருளாதார வாய்ப்புக் களம் மட்டுமல்ல அது நமது பண்பாட்டின் அடையாளம்.

– கோவை. விஜயராஜ்


# மித்ரா டைம்ஸ்

**விளம்பரக் கட்டணம்**

| | |
|---|---|
| **பின் அட்டை கலர்** | - **ரூ. 15,000 /-** |
| **உள் அட்டை கலர்** | - **ரூ. 10,000 /-** |
| **முழு பக்கம் கருப்பு வெள்ளை** | - **ரூ. 7,000 /-** |
| **அரை பக்கம் கருப்பு வெள்ளை** | - **ரூ. 3,500 /-** |
| **கால் பக்கம் கருப்பு வெள்ளை** | - **ரூ. 2,000 /-** |

தொடர்புக்கு : **044 - 2374 4661**

வனவிலங்குப் பூங்காவில் ஆமைகளைக் கண்டு நாம் குதூகலித்திருக்கிறோம். ஆனால் நாட்டில் இன்னும் நிலவி வரும் இல்லாமை, இயலாமை, வறுமை ஆகியவற்றைக் கண்டு நம்மால் சீற்ற மடையத்தான் முடியும். இன்னமும் வறுமைக் கோட்டுக்கு கீழே தங்கள் வாழ்க்கையை நடத்தி வரும். அன்றாட தினசரிக் கூலியாட்களை நினைத்து நம்மால் வேதனைப்படத்தான் முடிகிறது. அன்றைக்குத் தேவையான உணவை அன்றைக்குக் கூலி வேலை பார்த்து சம்பாதித்து பசியாற்றிக் கொள்ளும் வறுமையில் வாடும் மக்களைப் பார்த்தால் மனம் பதறுகிறது. நெஞ்சம் விம்முகிறது. இதயம் துடிதுடிக்கிறது.

கூலி வேலை பார்த்துப் பணம் சம்பாதிப்பது துளியும் கேவலமானதல்ல. ஆனால் நாள் முழுவதும் கூலி வேலை பார்த்து சம்பாதிக்கும் பணம் அவரது குடும்பத்திற்கு உணவுப் பற்றாக்குறையை ஏற்படுத்துமெனில் அது யோசிக்க வேண்டிய விஷயம். தனியொரு மனிதனின் மனித சக்தி சுரண்டடப்பட்டு அதன் மூலம் பணமுதலைகளின் கரங்கள் வீங்கி, பல்கிப் பெருகுவதை எந்நாளும் எவரும் ஏற்க மாட்டார்கள். பணக்காரர்களின் கரங்கள் வலிமைப் பெற்றும் ஏழைகளின் மனித சக்திகள் மெலிந்து கொண்டும் வருவதை எந்தவொரு நாகரீகமான மனிதனும் வரவேற்க மாட்டான்.

மெத்தப்படித்து கை நிறைய சம்பளம் வாங்கும் மேல்தட்டு வர்கத்தினரே சமாளிக்க முடியாமல் திண்டாடும் இன்றையப் பொருளா தார சூழ்நிலையை வறுமையில் வாடும் அன்றாடம் காய்ச்சிகளால் சமாளிக்கவே முடியாது என்பது நாமனைவரும் அறிவோம். செய்யும் வேலைக்கு தரப்படும் கூலி ஏற்றது தானா? என்பதைக் கூட நிர்ணயிக்கத் தெரியாதப் பாமரர்களின் அறிவிலித் தனத்தை தனக்குச் சாதகமாக்கிக் கொண்டுத் தான் பண முதலைகள் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக கொழுத்து வருகின்றனர்.





நன்கு படித்து ஓரளவு பொருளாதார வசதியுடன் இருக்கும் சுயநலவாதிகளின் லட்சியங்களும், குறிக்கோள்களும் படிப் பறிவற்ற நல்ல திடகாத்திரமான உடல் வலுவுள்ள மனிதர்கள் மூலம் நிறைவேற்றிக் கொள்ளப் படுகிறது. ஓய்வு ஒழிச்சலின்றி பன்னிரெண்டு மணிநேரமும் பணியில் பாடுபட்டு உழைக்கும் கூலித் தொழிலாளிக் குக் கூலி நிர்ணயமும், உறுதியும், நிச்சயமும் செய்யப்படாததால், உழைப்புக்கேற்றக் கூலியின்றி பல தினக்கூலி தொழிலாளர்கள் இன்னமும் கூட வறுமையின் கோரப்பிடியிலி ருந்து தப்பாமல் வறுமையிலும், பசியிலும் வாடி வதங்கி வருகின்றனர்.

உழைத்து சம்பாதித்த காசு முழுவதும் அந்த தினக்கூலியின் வீட்டுக்குப்போய் சேருகிறதா என்ற கேள்வி நம்முன் எழுகிறது. இக்கேள்விக்கு ம சாட்சிப்படி பதில் சொன்னால் இல்லை என்றே சொல்ல நேரிடும். ஏனெனில் கையில் காசைப் பார்த்த சில கூலி யாட் களுக்கு முதலில் நினைவுக்கு வருவது மதுக்கடைதான். இதில் விதிவிலக்குகளும் உண்டு.

மதுவின் வாசனையைக் கண்டாலே காத தூரம் ஓடும் கூலியாட்களும் உண்டு. எனினும், அனேக கூலியாட்கள் சம்பாதித்தக் காசைத் தாரை வார்ப்பது முதலில் மதுக்கடை யில்தான். மதுவின் போதையில் வரவு, செலவு கணக்குத் தெரியாமல் காசை தொலைத்துவிட்டு, வீட்டுக்குப் போகும் போது, மிகச் சொற்பமானக் காசையே எடுத்துச் செல்கின்றனர்.

பொருளாதாரச் சிக்கலை தவிர மது அருந்திவிட்டு செல்வதன் மூலமாகவும் அவர்கள் பல பிரச்சனைகளைச் சந்திக்க நேரிடுகிறது. **கல்வியறிவின்மையால், ஏற்படும் இக்குறைபாட்டை நீக்க அனைவருக்கும் கல்வி வழங்குவது ஒன்றே சாலச்சிறந்ததாகும்.**

**மனிதனைச் சிந்திக்க வைக்கும் கல்வி அறிவால் மட்டுமே வறுமைக் கோட்டுக்குள் கீழே வாழும் மக்களை மீட்டெடுக்க முடியும்.**

கல்வியின் மேன்மையை எல்லா வகை யிலும் பரவச் செய்து அடுத்தத் தலைமுறை யினர் ஒவ்வொருவரையும் பள்ளிக்கு அனுப்ப வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமை யாகும். தனியார் தொண்டு நிறுவனங்களும் சமூக ஆர்வலர்களும், கல்வியாளர்களும் ஒரு சமூகச் சிந்தனையுடன் ஒரே நேர்க்கோட்டில் செயல்பட்டு அடுத்த தலைமுறையினரை நல்லபடியாக நம்மால் உருவாக்க முடியும்.

தமிழகத்தில் பரவிக் கிடக்கும் குக் கிராமங்கள் முதல் வளர்ந்து வரும் சிறு நகரங்கள் தோறும், பள்ளி கல்லூரி, மாணவ, மாணவியரும், பள்ளி கல்லூரி ஆசிரியர் ஆசிரியைகளும் ஆங்காங்கே கல்வியறிவு விழிப்புணர்வு முகாம்கள் நடத்தி எதிர்காலச் சந்ததியினருக்கு கல்வியின் உயர்வை எடுத்துச் சொல்லி கல்வி யறிவைப் புகட்ட முன் வர வேண்டும். பள்ளிக் கூடங்களில் கல்வித்தரம் உயர ஆசிரியர்கள் பாடுபடுவது போல் பள்ளிக் கூடஙக்ளில் மாணவர்களின் எண்ணிக்கை உயர நாம் அனைவரும் உழைக்க வேண்டும்.

சமூக ஆர்வலர்களும் தனியார் தொண்டு நிறுவனங்களும் கல்வியாளர்களால் மட்டுமே இப்பிரச்சனையை தீர்த்துவிட முடியாது. நாமனைவரும் தோளோடு தோள் நின்று இதற்கு முடிவு கட்டினாலொழிய இப்பிரச்சனை தீரவே தீராது.

நாமனைவரும் ஒன்று கூடி அனை வருக்கும் கல்வி கற்பிப்போம். எதிர்கால சந்ததியினரை வளமாக்குவோம். இந்தியாவை வல்லரசாக்குவோம்.



# பெற்றோர்களின் கவனத்திற்கு..!

ஆணோ, பெண்ணோ, எந்த குழந்தை யானாலும் குறிப்பாக பெண் குழந்தைகளுக்கு குட் டச்-பேட் டச் (Good Touch - Bad Touch) எது என்பதை பெற்றோர்களே சொல்லிக் கொடுங்கள்.

மேலாடையின்றியோ, ஆடை இன்றியோ இருக்க குழந்தைகளை அனுமதிக் காதீர்கள். உங்களுக்கு வேண்டுமால் அவர்கள் குழந்தையாக தெரியலாம். எல்லோருக்கும் அப்படியே தெரியும் என்று எண்ணி விடாதீர்கள்.

குழந்தைகளை தனியே கடைக்கு அனுப்பும் போது கவனம் தேவை. நெடு நேரம் குழந்தை நிற்க வைக்கப்பட்டாலோ, பொருட்கள் மிகுதியாகவோ, இலவசமாகவோ வழங்கப்பட்டாலோ கவனம் தேவை.

பள்ளிக்கு ஏதோ ஒரு வாகனத்தில் தனியாகவோ, பிற குழந்தைகளுடனோ அனுப்பினால் அந்த வாகன ஒட்டுனரின் முழு விவரமும், அவர் வீட்டு முகவரி கைபேசி எண் உட்பட தெரிந்து வைத்துக்கொள்வது அவசியம்.

வாகன ஓட்டுனரின் நடத்தையிலும், பழக்க வழக்கத்திலும் ஐயமின்றி தெளிவுறுங்கள். பெரும்பாலான வாகன ஓட்டுனர்கள் மூட்டைகளை போல் குழந்தைகளை அடைத்து மரியாதையின்றி பேசுவதும், தொடக்கூடாத இடங்களை தொடுவதும், சில இடங்களில் நடக்கிறது.

யார் அழைத்தால் போக வேண்டும், யார் கொடுத்தால் வாங்க வேண்டும் என்று குழந்தைகளுக்கு தெளிவுப்படுத்துங்கள்.

குழந்தைகள், வீட்டின் முகவரி, பெற்றோரின் தொலைபேசி எண்கள் அறிந்திருத்தல் அவசியம்.

வீட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் இருந்தால், ஒருபோதும் ஒருவருடன் மற்றவரை ஒப்பிட்டு பேசாதீர்கள் வயது வித்தியாசம் எப்படி இருந்தாலும்.

ஒரு கட்டத்திற்கு மேல் உங்கள் விருப்பங்களை குழந்தையின் மேல் திணிக்காதீர்கள்.

வீட்டில் குழந்தைகள் இருக்கும்போது, வன்முறை, காதல், கொலை, களவுப் போன்றவை நிறைந்த திரைக்காட்சிகளையோ, நிகழ்ச்சிகளையோ பார்க்காதீர்கள்.

பெரியவர்கள், பெண்கள் எப்போதும் சீரியல்களில் மூழ்கி இருக்காமல் குழந்தைகளுக்கு பிடித்தாற்போலோ அல்லது அவர்களுக்கு பொது அறிவு பெருகும் வகையிலான நிகழ்ச்சிகளை பார்ப்பதும் நலம்.

குழந்தைகளிடம் தினமும் சிறிது நேரம் செலவிடுங்கள். ஒரு தோழமையுடன் அவர்கள் சொல்வதை காது கொடுத்து கேளுங்கள். தவறுகளை தன்மையுடன் திருத்துங்கள். தண்டிக்க நினைக்காதீர்கள்.

ஒரு முறை நீர் ஊற்றியவுடன் விதை மரமாகி விடாது. நீங்கள் ஒருமுறை சொன்னவுடன் குழந்தைகள் உங்கள் விருப்பப்படி மாறிவிட மாட்டார்கள். உங்களுக்கு பொறுமை அவசியம்.

பள்ளி விட்டு வரும் குழந்தைகளை அன்புடன் அரவணைத்து வேண்டியது செய்ய அம்மாவோ, பெரியவர்களோ வீட்டில் இருத்தல் வேண்டும்.

குழந்தைகளின் எதிரில் புறம் பேசாதீர்கள். பின்னாளில் அவர்கள் உங்களை பற்றி பேசலாம்.

உங்கள் பெற்றோரை நடத்தும் விதம், உங்கள் பிள்ளைகளால் கவனிக்கப்படுகிறது. நாளை உங்களுக்கு அதுவே நடக்கலாம்.

படிப்பு என்பது அடிப்படை, அதையும் தாண்டி குழந்தைகளுக்கு உள்ள மற்ற ஆர்வத்தையும் ஊக்குவியுங்கள்.

ஓடி ஆடி விளையாடுவது குழந்தைகளின் ஆரோக்கியத்திற்கு அவசியம். விளையாட்டிற்கு தடை போடதீர்கள்.

குழந்தைகள் கேள்வி கேட்கட்டும். அவர்களின் வயதுக்கேற்ப புரியும்படி பதில் சொல்லுங்கள். பொது அறிவு கேள்விகள் கேட்கப்படும் போது தெரிந்தால் சொல்லுங்கள். தெரியாவிட்டால் பிறகு சொல்லுகிறேன் என்று சொல்லுங்கள். சொன்னபடி கேள்விக்கான பதிலை அறிந்து கொண்டு மறக்காமல் அவர்களிடம் சொல்வது அவசியம்.

ஒரு போதும் "ச்சீ வாயை மூடு" என்று அவர்களிடம் எரிச்சல் காட்டி, அவர்களின் ஆர்வத்தை குழி தோண்டி புதைத்து விடாதீர்கள்.

பசி என்று குழந்தை சொன்னால். உடனே உணவு கொடுங்கள். அரட்டை யிலோ, சோம்பலிலோ, வேறு வேலையிலோ குழந்தையின் குரலை அலட்சியப் படுத்தாதீர்கள்.

ஒரு போதும், உங்கள் குழந்தைகளின் எதிரே சண்டை இடாதீர்கள். ஒவ்வொரு குழந்தையும் ஒரு வரம், அவர்கள் ஒரு போதும் உங்கள் கோபதாபங்களின் வடிகால்கள் அல்ல.

## ஒரு தாயின் முன் யோசனை



பெங்களூருவில் ''லிட்டில் பிளவர்'' என்ற பள்ளியில் படிக்கும் 8 வயது சிறுமியிடம் முன் பின் தெரியாத ஒரு நபர், உன்னை அழைத்துவரச் சொல்லி உன்னுடைய அம்மா என்னை அனுப்பியுள்ளார். வா போகலாம் என்று சொல்லி அழைத்திருக்கிறார்.

உடனே அந்த சிறுமி ''பாஸ்வேர்டு'' சொல்லுங்கள் உங்களுடன் வருகிறேன் என்று சொல்லி இருக்கிறாள். (அதாவது முன்பின் தெரியாத யாராவது உன்னை அழைத்தால் இந்த பாஸ்வேர்டு கேட்டு தெரிந்துகொண்டு செல் என்று முன்னரே அம்மாவும் சிறுமியும் ஒரு “பாஸ்வேர்டு” பகிர்ந்து கொண்டுள்ளனர்) சிறுமி பாஸ்வேர்டு கேட்கவும் அந்த கடத்தல் ஆசாமி எஸ்கேப் ஆகிவிட்டான்.

அருமையான யோசனை அல்லவா. இது பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு இந்த முறையை உடனே அமுல்படுத்துங்கள் பெற்றோர்களே.




எம்.எஸ். மூர்த்தி

# உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ..?

பணம் எல்லோருக்கும் எளிதில் கிடைத்து விடுவதில்லை. ஆனால் அதுதான் உலகத்தின் ஆதாரம், அத்தாட்சி, அதை தேடித்தான் மக்கள் அனைவரும் ஓயாமல் பல வழிகளில் முயற்சி செய்கிறார்கள். சிலருக்கு சிறிதளவே கிடைக்கிறது. வெகு சிலருக்குத்தான் அதிக அளவில் கிடைக்கிறது.

**இதென்ன மாயமா? மந்திரமா? இரண்டும் இல்லை.**

உழைப்பு கடின உழைப்பு, ஆற்றல் உன்னதமான ஆற்றல், முயற்சி விடா முயற்சி எல்லாவற்றுக்கும் மேலாக துணிச்சல் இவைகளை லட்சியமாக கொண்டு செயல்படுபவர்களே வெற்றியாளர்கள். பணம் படைத்தவர்கள். அப்படிப்பட்ட வெற்றியாளர்களில் ஒருவர்தான் திரு. எம்.எஸ். மூர்த்தி. அவர்கள்

கடந்த 25 வருடங்களாக சென்னை மற்றும் தமிழகமெங்கும் கட்டிட கட்டுமானம், கட்டிட பொறியியல் நில அபிவிருத்தி தொழில்கள் என மிக நேர்த்தியாக செய்து வருபவர்.

மேலே குறிப்பிட்டிருந்த கடின உழைப்பு, உன்னதமான ஆற்றல், விடாமுயற்சி, துணிச்சல் ஆகியவற்றுடன் தன்னுடைய 25 வருட கால அனுபவத்தையும் கொண்டு மித்ரா ஹோம் மேக்கர்ஸ் (பி) லிட், மூர்த்தி அசோசியேட்ஸ், ஜனமித்ரா சாரிட்டபிள் டிரஸ்ட், ஈஸ்ட்மென் டெக்னாலஜிஸ் (பி) லிட், மித்ரா பிக்சர்ஸ், மித்ரா செக்யூரிட்டி சர்வீஸ் (பி) லிட், மித்ரா ஃபைனான்சியல் கண்சல்டன்ட் சர்வீசஸ் ஆகிய நிறுவனங்களை தோற்றுவித்து வெற்றிகரமாக நடத்தி வரும் இளம் சாதனை தொழிலதிபராக திகழ்பவர் திரு. எம்.எஸ். மூர்த்தி அவர்கள்.

இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்ததுபோல் உள்ளது இவரது மனிதநேயம். குறிப்பாக நண்பர்களுக்கு

உதவும் உயர்ந்த உள்ளம், நட்பில் ஏற்றத் தாழ்வு காண்பவரல்ல.

**“உடுக்கை இழந்தவன் கைப்போல் ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு”**

என்ற திருவள்ளுவரின் திருக்குறளுக்கு குரல் கொடுக்க இவரின் எண்ணத்தில் உதித்த முற்றிலும் புதுமையான ஒப்பற்ற ஒரு திட்டம் தான் ‘‘மித்ரா இண்டர்நேஷனல் பிசினஸ் கிளப்’’ என்கிற நண்பர்களை ஒன்றிணைக்கும் ஒரு மாபெரும் இயக்கம்.

நீண்ட காலமாக தன் மனதில் துளிர் விட்டு வளர்ந்துக் கொண்டிருந்த இந்த உயர்ந்த நோக்கத்தை கடந்த ஆண்டின் இறுதிநாளில் 2014 புத்தாண்டை வரவேற்க சென்னை, தி.நகர், ஆந்திரா சோசியல் & கல்சுரல் அசோசியேஷனில் குழுமியிருந்த நண்பர்கள் மத்தியில் விவரித்தார். புதுமையான இந்த திட்டத்திற்கு அமோக வரவேற்பு கிடைத்ததில் உடனே செயலில் இறங்கினார் திரு. எம்.எஸ். மூர்த்தி அவர்கள்.

சென்னை, சூளைமேடு நெடுஞ்சாலையில் அமைந்துள்ள எண்.9, சித்ரா அவென்யூ, இன்சக்கல் பிளாக்கின் 001 என்ற இலக்கத்தில் தரை தளத்தில் 2500 ச, அடியில் முற்றிலும் குளிரூட்டப்பட்ட அலுவலகத்தை தலைமையகமாக கொண்டு ‘‘மித்ரா இண்டர்நேஷனல் பிசினஸ் கிளப்’’ இயங்கி வருகிறது.

பலமுறை நண்பர்களுடன் கலந்தாலோசித்து கிளப்பின் நோக்கங்களாக, மாவட்டம் தோறும் தொழில் முனைவோர்கள், தொழிலதிபர்கள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், பத்திரிகையாளர்கள், சினிமா துறை வல்லுநர்கள், டிராவல்ஸ் அதிபர்கள், ரியல் எஸ்டேட் உரிமையாளர்கள், ஓட்டல் அதிபர்கள், நிதி நிறுவன அதிகாரிகள், முதலீட்டாளர்கள், கட்டிடக்கலை நிபுணர்கள், கட்டுமான அதிபர்கள், ஓய்வு பெற்ற அரசு அதிகாரிகள், நீதியரசர்கள் மற்றும் வணிக பெருமக்கள் என அனைத்து பிரிவினரையும் உறுப்பினர்களாக ஒருங்கிணைத்து நண்பர்களாக அறிமுகம் செய்து இணைந்துக்கொள்வதே ஆகும்.

இவ்வாறாக இந்தியா மற்றும் வெளிநாடுகளிலும் முறையாக உறுப்பினர்களை இணைத்து செயல்படும் அந்தந்த மாவட்ட உறுப்பினர்களை ஒருங்கிணைத்து, கலந்தாய்வுக் கூட்டத்தில் உறுப்பினர்கள் தங்களுக்கு தேவையான தொழில்நுட்ப உதவி, தொழில்நுட்ப ஆலோசனை, தொழில் வளர்ச்சி, தொழிலாளர் பிரச்சனைக்கு தீர்வு, புதிய தொழில் அறிமுகம் போன்ற உதவிகளை பெற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் நேரடியாக சந்தித்து உரையாட வாய்ப்பு ஏற்படுத்திக் கொள்வதற்கு உதவும்.

மக்கள் நலத்திட்டங்கள், மக்கள் சேவை போன்றவற்றிலும் சிறப்பாக செயலாற்றும் நபர்களை கௌரவிக்கும் விதமாக நினைவு பரிசுகளை வழங்குதல், இளைஞர்களை ஊக்குவிக்கும் விதமாக விளையாட்டு போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்குதல், இலவச மருத்துவ முகாம்களை நடத்தி ஏழை, எளியோர் பயன்பெற செய்தல், தொலைக்காட்சி ஒளிபரப்பை துவக்கி மக்கள் பயன்பெறும் வகையில் பயனுள்ள சமூக நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குதல், தேசிய மாநில அளவில் வர்த்தக பொருட்காட்சி ஏற்பாடு செய்தல், தினசரி செய்தி பத்திரிகை துவக்கி மக்களுக்கு நேர்மையான செய்திகளை வழங்குதல் போன்ற சேவைகள் சிறப்பாக செயல்பட முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

மேலும் உலகெங்கும் உள்ள உறுப்பினர்களின் புகைப்படம், தொழில், விருப்பகளம், கைபேசி எண், மின்னஞ்சல் முகவரி ஆகியவை மாநில, மாவட்ட வாரியாகவும், தொழில் வாரியாகவும், பிரிந்து அச்சிட்ட கையேடு அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்கப்படும். இந்த விவரங்கள் அனைத்தும் மித்ரா இண்டர்நேஷனல் பிசினஸ் கிளப் வலைத் தளத்திலும் கிடைக்க பெறும். இதன்மூலம் உறுப்பினர்கள் தங்களுக்கு தேவையான உதவிகளை கையேடு மற்றும் வலைத்தளத்தில் உலகெங்கும் உள்ள உறுப்பின



''மித்ரா இண்டர் நேஷனல் பிசினஸ் கிளப்'' மிக உன்னதமான நிலையை பெறும் என்பதில் உறுதியாக உள்ளார்.

திரு. எம்.எஸ். மூர்த்தி அவர்களின் மித்ரா ஹோம் மேக்கர்ஸ் (பி) லிட், சென்னை, கும்மிடிப்பூண்டி, உத்திர மேரூர், காஞ்சிபுரம், கோவை போன்ற நகரங்களில் குடியிருப்பு அடுக்குமாடி கட்டிடங்கள், வர்த்தக மால்கள், தொழில்கூட கட்டுமானங் கள் என சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

**மித்ரா ஃபைனான்சியல் கன்சல்டண்ட் சர்வீஸ்**

இதன் மூலம் வீட்டுக் கடன்கள், வங்கியில் அடமானம் வைக்கவும், மேன்பவர், பிராஜக்ட் முதலீடுகள் ஆகியவற்றை மேற்கொண்டு சிறப்பாக செயல்பட்டுவருகிறது.

**மித்ரா செக்யூரிட்டி சர்வீசஸ் (பி) லிட் கீழ்கண்ட சேவைகளை வழங்கி வருகிறது.**

ர்களின் விவரங்களை பெற்று அவர்களை தொடர்பு கொண்டு தங்களின் உறுப்பினர்கள் எண்ணை தெரிவித்து தேவையான உதவிகளை பெறலாம். மேலும் மற்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்புகளை உருவாக்கித் தரலாம். வாய்ப்புகளை பெற்றுக் கொள்ளலாம்.

மிக விரைவில் சென்னைக்கு மிக அருகாமையில் 30 ஏக்கர் பரப்பளவில் பல்வேறு சிறப்பு அம்சங்களை அதாவது பொழுதுபோக்கு மையம், ஆயுர்வேத மனச் சோர்வு நீக்க மையம், நீச்சல் குளம், மருத்துவ உதவி மையம், சினிமா அரங்கம்ட, விருந்து மண்டபம் ஆகியவைகளை கொண்டு மல்டி ஸ்பெஷாலிட்டி கிளப் ஒன்றை உருவாக்கவும் திட்டம் உள்ளது.

வாழ்க்கையில் முன்னேற துடிக்கும் உயர்ந்த லட்சியங்கள் கொண்டவர்களை மேலும் ஊக்குவிக்கும் விதமாக சிறப்பான உயர்ந்த நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டுள்ள

- Personal Body Guards All Over Tamilandu
- Cash Transportation Service
- Ex-Servicemen Secrity services Guards
- Dog Partolling Services
- Personal & Individual investiga
- Corporate Investigation
- Address Verification Services
- House Keeping Services
- Armed Security Service in Chennai

**மேலும் சீர்நோக்குப் பார்வையாக**

**"மித்ரா டைம்ஸ்"**

**என்ற இந்த மாத இதழை தொடங்கி உள்ளார். அவரின் வெற்றிப் பயணம் மென்மேலும் தொடரும்.**

**– கே. பாலகிருஷ்ணன்**

# தலைவருக்கு தண்டனை..! தொண்டர்களே உஷார்...?

போராட்டங்களின் போது பொதுச் சொத்துக்களை சேதப்படுத்தும் தொண்டர்களுக்கு கடும் தண்டனை விதிப்பதோடு, சம்பந்தப்பட்ட கட்சியின் தலைவர்களுக்கும் தண்டனை வழங்க வகை செய்யும் சட்டத்திருத்ததைங் கொண்டுவர மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இது தொடர்பாக கருத்துக்களைத் தெரிவிக்குமாறு, மத்திய உள்துறை அமைச்சகம் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது. போராட்டங்கள், எதிர்ப்புப் பேரணிகள் மற்றும் ஆர்ப்பாட்டங்களின்போது பொதுச் சொத்துக்களை சேதம் விளைவிப்போருக்கு தண்டனையைக் கடுமையாக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இதுதொடர்பாக அமைக்கப்பட்ட முன்னாள் நீதிபதி கே.டி.தாமஸ் தலைமையிலான குழு தனது அறிக்கையை அளித்துள்ளது. அதில், தற்போது நடைமுறையில் உள்ள சட்டத்தில் வலுவான மாற்றம் தேவைப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தப் பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டுள்ள மத்திய அரசு, அதுதொடர்பான கருத்துக்களை ஜூலை 20 ந் தேதிக்குள் தெரிவிக்குமாறு பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

சட்டத்திருத்தத்தின் வரைவு நகல் உள்துறை அமைச்சகத்தின் இணைய தளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, மத்திய, மாநில மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான சொத்துக்களை சேதப்படுத்தினால், அபராதத்துடன் 5 ஆண்டுகள் வரை கடுங்காவல் தண்டனை விதிக்கப்படும்.

பேருந்துகள், ரயில்கள், அரசு கட்டடங்கள், குடிநீர் மற்றும் கழிவுநீர்க் கால்வாய்கள், தொலைத் தொடர்பு சாதனங்கள் உள்ளிட்டவை இதில் அடங்கும். பொதுச் சொதுச் சொத்துக்களுக்கு தீவைத்தாலோ அல்லது வெடிவைத்து சேதம் விளைவித்தாலோ தற்போது இருந்து வரும் ஓராண்டு சிறைத்தண்டனை, அபராதத்துடன் பத்தாண்டுகளாக அதிகரிக்கப்படும்.

மேலும் சேதம் விளைவிக்கும் தொண்டர்களின அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் தண்டனை வழங்கும் வகை சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த வழக்குகளில் குற்றம் சாட்டப்படும் மற்றும் தண்டனை பெறும் நபரை விடுவிக்க அரசுத் தரப்பு வழக்கறிஞர் எதிர்ப்புத் தெரிவித்தால் ஜாமீன் வழங்கப்பட மாட்டாது. இந்தத் திருத்தங்களைக் கொண்டுவர ஏதுவாக, பொதுச்சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பதை தடுக்கும் சட்டம்-1984 மாற்றி அமைக்கப்பட உள்ளது.



# கோடையும் நீரிழிவும்

## டாக்டர் பி. குமரவேல் விளக்குகிறார்

ஐந்தில் ஒருவருக்கு நீரிழிவு நோய் இருக்கிறது. அவர்களுக்கு கோடை காலம் பொல்லாத நேரம் என்கிறார்கள். இது உண்மைதானா? ஏன் அப்படி?

**பிரபல நீரிழிவு நிபுணர் டாக்டர் பி. குமரவேல் விளக்குகிறார்.**



டாக்டர் பி. குமரவேல்

**கோடையில் நீரிழிவு நோயாளிகள் மிகவும் உஷாராக இருக்க வேண்டும் என்பது ஏன்?**

அக்னி நட்சத்திரம் ஆரம்பித்து விட்டது. எந்த நோயாளியை கேட்டாலும் சொல்வார். அடிக்கடி தலை சுற்றுகிறது என்று. ஹீட் ஸ்டிரோக் என்று சொல்லப்படும் மயக்கமும் இந்த சீசனில்தான் வருகிறது.

**வெயில் எப்படி நீரிழிவு நோயாளிகளை பாதிக்கிறது?**

வழக்கத்தை விட கோடையில் வெயிலின் தாக்கம் அதிகம், அதனால் வியர்வை அதிகமாக சுரக்கிறது. எனவே உடலில் நீர் குறைகிறது. உறுப்புகளின் இயக்கம் பாதிக்கிறது. அது மயக்கத்துக்கு கொண்டு போகிறது.

**நீர் குறைவதால், உறுப்புகளின் இயக்கம் எப்படி பாதிக்கிறது என்பதை விளக்குங்களேன்?**

நீரிழிவு நோயை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். ரத்தத்தில் சுகர், சர்க்கரை என்று சொல்கிறோம் அல்லவா. அதுதான் உடலின் இயக்கத்துக்கு சக்தி அளிக்கும் எரிபொருள். பெட்ரோல் இல்லாமல் இன்ஜின் வேலை செய்யாது. அது மாதிரி சர்க்கரை இல்லாமல் உடல் வேலை செய்யாது. ஒவ்வொரு அணுவுக்கும் திசுவுக்கும் சர்க்கரை சென்றாக வேண்டும். அந்த வேலையை செய்வது இன்சுலின். அதை உற்பத்தி செய்வது கணையம். அந்த உறுப்பு பாதிக்கும்போது இன்சுலின் உற்பத்தி குறையும். அதனால் செல்களுக்கு சர்க்கரை கிடைக்காமல் போகும்.

உண்மையில் ஒவ்வொரு செல்லைச் சுற்றிலும் லிம்ஃப் என்று சொல்லக்கூடிய நிணநீர் ஓடிக்கொண்டிருக்கும். அந்த நிணநீரில் சர்க்கரை இருக்கும். ஆனால் இன்சுலின் இல்லாமல் அந்த சர்க்கரையை செல்கள் பெற இயலாது.

அது மட்டும் அல்ல, இன்சுலின் குறையும் வேளையில், செல்களில் உள்ள

கொஞ்சம் நீரையும் நிணநீரில் உள்ள சர்க்கரை உறிஞ்சிவிடும். இதை ரிவர்ஸ் ஆஸ்மாசிஸ் என்பார்கள். இப்படி நடக்கும்போது. அதாவது செல்களில் நீர் வற்றும்போது, உடலில் கிடோன் எனப்படும் வஸ்து உருவாகிறது. அது மயக்கத்தை வரவழைக்கிறது. கோமா வரையிலும் செல்லக்கூடும்.

**கோமா என்பது மூளையின் செயல்பாடு நின்றுபோகும் நிலைதானே. அப்படி என்றால் மூளைக்கு சர்க்கரை கிடைக்க இன்சுலின் தேவையில்லை என்று சொல்வது தவறா?**

தவறு இல்லை, அது உண்மைதான். மூளைக்கு மட்டும் சர்க்கரையை கிரகித்து கொள்ள இன்சுலின் உதவி தேவைஇல்லை. இத்தனைக்கும் வேறு எந்த உறுப்பையும் விட மூளையில் உள்ள செல்கள்தான் 300 மடங்கு சர்க்கரையை பயன்படுத்துகிறது. இது படைப்பின் ஒரு அதிசயம்தான். இவ்வாறு ஒரு ஏற்பாடு இல்லை என்றால், நீரிழிவு நோயாளிகளில் முக்கால்வாசி பேருக்கு மூளை செயல்படாமல் போயிருக்கும்.

**ஆனாலும் கோடையில் மயக்கம் வரத்தான் செய்யுமா?**

அதற்கு காரணம் இருக்கிறது. வெயில் காலத்தில் நீங்கள் வெளியே சுற்றாமல் வீட்டில் பத்திரமாக உட்கார்ந்து இருந்தால் கூட உடலில் வியர்வை பெருகும். சர்வ சாதாரணமாக 1 முதல் ஒன்றரை லிட்டர் வியர்வை வெளியேறும். வாக்கிங் அது இது என்று வெளியே போய் வந்தால் இன்னும் ஒரு லிட்டர் வியர்வை சுரக்கும். அதுவே, வேறு வழியில்லாமல் வெயிலை பொருட் படுத்தாமல் வேலை செய்ய நேரிட்டால் 3 லிட்டருக்கு மேல் உடல் நீர் வியர்வையாக வெளியே போய்விடும். இதை ஈடுகட்ட தவறினால் மயக்கம் வரும்.


*நிறைய தண்ணீர் குடிப்பதன் மூலம் இந்த பற்றாக்குறையை சரிகட்ட முடியும்தானே?*

முடியும். நீரிழிவு நோய் இருப்பவர்கள் கோடையில் தினமும் 3 லிட்டராவது தண்ணீர் குடிக்க வேண்டும். அப்படி செய்தால் பசியும் தெரியாது. சாப்பாடு அளவு குறையும். அதுவும் நல்லதுதான்.

**வெறும் தண்ணீர் போதுமா? சாப்பாடு தேவை இல்லையா?**

கட்டாயம் தேவை, குறை வாக சாப்பிடுவது நல்லது என்பதற்காக சொன்னேன். அதே மாதிரி வெறுமனே பச்சை தண்ணீரை மட்டும் குடித்துக் கொண்டிருப்பது போதாது. உடலில் தாது உப்புக்கள் குறையும், அசதி அதிகமாகும். கை, கால் உளைச்சல் உண்டாகும். எலுமிச்சம் பழம் நல்ல மருந்து. தண்ணீரில் அதன் சாறு பிழிந்து சிறிது உப்பு சேர்த்து குடிக்கலாம். நான் சிபாரிசு செய்த 3 லிட்டரில் கால் பங்கு இந்த திரவம் குடிப்பது நல்லது.

*பழங்கள் அதிகமாக சாப்பிடுவதும் வெயிலின் தாக்கத்தை சமாளிக்க உதவும் அல்லவா?*




நிச்சயமாக. ஆனால் பழம் சாப்பிடச் சொன்னால் ஜூஸ் குடிக்கிறார்கள். கேட்டால் நீங்கள்தானே சொன்னீர்கள் என்கிறார்கள். நாங்கள் ஜூஸ் குடிக்கவா சொல்கிறோம். பழமாக சாப்பிடுங்கள். அதுதான் உடலுக்கு நல்லது. ஆப்பிளோ, சாத்துக்குடியோ பழமாக




சாப்பிட்டால் ஒன்றுபோதும். அதுவே ஜூஸ் போட்டால் 2 அல்லது 3 தேவைப்படும். அதில் சர்க்கரை சேர்ப்பார்கள் அல்லது சர்பத் போன்ற எதையாவது கலப்பார்கள். அது உடலுக்கு நல்லது அல்ல.

**நாவல் பழம் நல்லது என்கிறார்களே..?**

ஆமாம், ரொம்ப நல்லது. தினமும் ஏழெட்டு பழங்களாவது சாப்பிட வேண்டும். அது மட்டும் அல்ல. கோடையில் கிடைக்கும் நிறைய பழங்கள் உடலுக்கு மிகவும் பயன்தரக் கூடியவை. வெள்ளரிக்காய், கிருணி பழம், தர்பூசணி, முலாம் பழம், பப்பாளி, இலந்தம் பழம் ஆகியவை அன்றாடம் சாப்பிடுவது நல்ல பழக்கம். முடிந்தவரை தோலோடு சாப்பிடுவது நல்லது. நான் பார்த்தவரை பெரும்பாலானவர்கள் தோலை சீவி வீசி விட்டு சாப்பிடுகின்றனர். அப்படி வீசப்படும் தோலை சாப்பிடும் ஆடு, மாடுகள் அவர்களை விட ஆரோக்கியமாக வளர்கின்றன. தோலில் கெடுதல் கிடையாது. லேசாக கழுவினால், மேல் அசுத்தம் நீங்கிவிடும். தைரியமாக சாப்பிடலாம்.

**இளநீர் எத்தனை குடிக்கலாம்?**

இளநீரும் அற்புதமான பானம். இயற்கையானது. கலப்படம் இல்லாதது. ஆனாலும் அளவோடுதான் குடிக்க வேண்டும். வேகாத வெயிலில் அலைந்து திரிந்துவிட்டு 3 இளநீர் ஒன்றாக குடிப்பது உத்தமம் அல்ல. சிலர் ஒரு லிட்டர் பாட்டிலை அப்படியே வாயில் இருந்து எடுக்காமல் தண்ணீர் குடிப்பதை பார்த்திருக்கிறேன். இதெல்லாம் புத்திசாலித் தனமான வேலைகள் கிடையாது. அவ்வப்போது சிறு இடைவெளிகளில் 300 மில்லி, 200 மில்லி தண்ணீர் குடித்தாலே போதும். எல்லா இடத்திலும் எல்லா பானங்களும் பழங்களும் கிடைக்கும்போது பெரிய இடைவெளி தேவையில்லை.



பல்வேறு மருத்துவ குணங்களை கொண்ட முருங்கை மரம் முழுவதும் மனிதனுக்கு பயனளிக்கிறது. முருங்கைக் கீரை வாரம் இருமுறை சாப்பிட்டுவர உடல் சூடு தணியும். முருங்கை கீரையில் இரும்புச்சத்து, சுண்ணாம்புசத்து கணிசமாக உள்ளது. முருங்கை கீரையை வேகவைத்து அதன் சாற்றை குடித்து வந்தால் உடல் சூடு தணியும். வெப்பத்தின் காரணமாக உடலில் ஏற்படும் மலச்சிக்கல் நீங்கும்.

முருங்கை காய் உடலுக்கு நல்ல வலிமையைக் கொடுக்க வல்லது. இதை உண்டால் சிறுநீரகம் பலப்படும் தாதுவும் பெருகும். முருங்கை இலையை உருவி காம்புகளை நறுக்கி விட்டு பின் மிளகு ரசம் வைத்து சாப்பாட்டுடன் சேர்த்து உண்டு வந்தால் கை, கால் உடம்பின் வலிகள் அனைத்தும் நீங்கும். முருங்கை இலைகளில் இரும்பு, தாமிரம், சுண்ணாம்புச் சத்து ஆகியவை இருக்கின்றன.

இந்த இலைகளை நெய்யில் வதக்கி சாப்பிட்டால் ரத்த சோகை உள்ளவர்களின் உடம்பில் நல்ல ரத்தம் ஊறும். பல் கெட்டிப்படும். முடி நீண்டு வளரும். நரை முடி குறையும். தோல் வியாதிகள் நீங்கும். கடுமையான ரத்த சீதபேதி, வயிற்றுப் புண், தலைவலி, வாய்ப்புண் ஆகிய வியாதிகளுக்கெல்லாம் முருங்கைக்கீரை கை கண்ட மருந்து.



# உலகின் மிகப்பெரிய இந்து கோவிலை கட்ட நிலம் வழங்கிய பீகார் முஸ்லீம்கள்

உலகின் மிகப்பெரிய இந்து கோவிலை கட்ட பீகாரில் உள்ள முஸ்லீம்கள் நிலத்தை தானமாக அளித்துள்ளனர்.

பீகார் மாநிலம் கிழக்கு சம்பரன் மாவட்டத்தில் உள்ள கேசரியா அருகே இருக்கும் ஜானகி நகரில் உலகின் மிகப்பெரிய கோவிலை கட்ட உள்ளனர். ரூ.500 கோடி செலவில் கட்டப்படும் அந்த கோவிலின் கட்டுமானப்பணிகள் வரும் ஜூன் மாதம் துவங்க உள்ளது.

இந்த கோவிலை கட்டும் பணியை மேற்கொள்ள உள்ள பாட்னாவைச் சேர்ந்த மகாவீர் மந்திர் அறக்கட்டளையின் செய லாளரும், முன்னாள் ஐபிஎஸ் அதிகாரியுமான ஆச்சார்யா கிஷோர் குனால் கூறுகையில்,


உலகின் மிகப்பெரிய இந்து கோவிலை கட்ட பீகார் முஸ்லீம்கள் நிலத்தை தானமாக அளித்துள்ளனர். அவர்களின் உதவி இல்லாமல் இந்த கோவிலை கட்ட முடியாது. சில முஸ்லீம்கள் நிலத்தை தானமாக அளித்தனர்.

சிலர் குறைந்த விலைக்கு விற்றனர். அவர்கள் நிலத்தை தராமல் இருந்திருந்தால் கோவில் கட்டும் பணி தாமதமாகியிருக்கும். நிலநடுக்கம் ஏற்பட்டாலும் பாதிப்பு ஏற்படாத வகையில் கோவில் கட்டப்படும்.

விராட் ராமாயன் மந்திர் என்று பெயர் வைக்கப்பட்டுள்ள அந்த கோவில் கம்போடியாவில் உள்ள அங்கோர் வாட் கோவிலை விட உயரமாக கட்டப்படும்.


கோவிலில் 20 ஆயிரம் பக்தர்கள் அமரும் வகையில் அறை கட்டப்பட உள்ளது. கோவிலை கட்ட 200 ஏக்கர் நிலம் வாங்கப் பட்டுள்ளது. அதில் 50 ஏக்கர் நிலத்தை இந்துக் களும், முஸ்லீம்களும் தானமாக அளித்தனர். மீதமுள்ள நிலத்தை விலை கொடுத்து வாங்கினோம் என்றார்.

# வந்துட்டாங்கய்யா... வந்துட்டாங்க...



சென்னை தொழிலதிபர்களை மிரட்டி பணம் பறிக்கும் கூலிப்படையினரின் அட்டகாசம் எல்லை மீறிக்கொண்டே போய்க் கொண்டிருக்கிறது. குறிப்பாக வட சென்னையில் இந்த பணம் பறிக்கும் கூலிப்படை புள்ளிகள் காவல் துறையில் உள்ள சில கருப்பாடுகளின் துணையோடு பணம் கேட்டு மிரட்டுவது, தொழிற்சாலைகளில் திருட்டுத்தனமாக நுழைந்து பொருட்களை களவாடுவது என அட்டகாசம் செய்து வருகிறது. அதுவும் நலிவுற்ற, மூடப்பட்ட ஆலைகள் என்றால் கேள்வியே இல்லை என்றளவில் கொள்ளை அடிக்கிறது.

இதுவரை ரவுடிகள் மற்றும் கூலிப்படையினரின் அட்டகாசம் வேறூன்றி இருந்தாலும் மண்ணுக்குள் மறைந்திருக்கும் வேர்களாகத்தான் இருந்தார்கள். சமீபகாலமாக மீண்டும் துளிர்விட ஆரம்பித்திருக்கும் நிலையில் இதற்கெல்லாம் முடிவு வந்துவிட்டதாக தொழிலதிபர்கள், தொழில் முனைவோர்கள் உற்சாகத்துடன் உள்ளனர். காரணம் தமிழக முதல்வர் அம்மா அவர்கள் மீண்டும் முதல்வராக பொறுப்பேற்றுக் கொண்டார்கள்.இனியும், இதுபோன்ற கிரிமினல்களின் ஆட்டத்தை தொடரவிட மாட்டார்கள் என்ற நம்பிக்கையில்தான். அம்மா அவர்கள் சாட்டையை சுழற்றத் தொடங்கிவிட்டார் என்றே சொல்லலாம். இதனால் கைக்கூலிகளும் கருப்பாடுகளும் பதுங்குக் குழியைத் தேடி ஓடிக்கொண்டிருக்கிறார்களாம்.




# A NEED OF AN HOUR FOR TODAYS YOUNGER GENEATION

# PERSONALITY DEVELOPMENT

Educators, youth workers, parents, and community members often share a common goal—they want to help young people succeed. Search Institute experts can help facilitate that goal through training and professional development. Search Institute also works directly with young people to help them grow as individuals and leaders

In daily life the term personality is very freely used by people with different meanings. Some people refer to the physical appearance like height, weight, colour, body built, dress, voice, etc. Some other people refer to intellectual qualities like intelligence, activeness, way of speech, thinking and reasoning abilities, etc.

It is also referred to social characteristics like sociability, generosity, kindness, reservedness, etc. On the basis of these characteristics they judge people as strong or weak personalities, good and bad personalities, etc.

In this way we all make personality judgments about the people we know. A major part of coming to understand ourselves is developing a sense of what our personality characteristics are. We even form impressions about personalities of people we do not know, but have only read about. As we shall see, these everyday uses of the term are quite different from the meaning psychologists give to the term personality.

The term personality has been derived from a Latin word ‘persona’- means ‘mask’. In olden days, while playing dramas, in order to

give good effects to the roles played by them, the Greek actors used to wear masks.

The psychologists continue to use the term personality to indicate that, the real or inner qualities of a person will be different from, that of the qualities seen apparently. Hence, defining and understanding the personality is not very easy as it appears. It is very difficult to define personality in a precise way.

Personality development is for two purposes: one is to achieve success in material life and the other is to achieve success in spiritual life. For both purposes it requires to have balanced and developed faculties like physical body with sharp sense organs and working organs, concentration, memory, sensitivity, emotions like love (concern) and enlightened ego, will power, confidence, courage, good discrimination, intelligence and many others.

Power, fame and money or all the three are one set of components of life. Though they are considered harmful to human growth, these are important for getting success in material life. Man can use them for betterment of society. Simplicity, knowledge, and happiness or all the three are another set of components of life and they are important for getting success in spiritual life. These can be achieved only by development of personality. What is personality?


The word personality comes from the Latin word persona which means the 'mask'. The masks were used in dramas to show different characters, emotions and behavior. In Sanskrit 'vyaktitva' is the word for personality, which means the essence of vyakti (human being). Hence, personality means the essence of character and behavior of a individual. It has two important dimensions: one is internal and the other is the external.

Internal personality means the essence of character and behaviour of oneself with the internal world and the external personality means essence of character and behavior of oneself with the external world. Both dimensions of personality are inter connected, interrelated and interdependent on each other.

Personality development is for two purposes: one is to achieve success in material life and the other is to achieve success in spiritual life. For both purposes it requires to have balanced and developed faculties like physical body with sharp sense organs and working organs, concentration, memory, sensitivity, emotions like love (concern) and enlightened ego, will power, confidence, courage, good discrimination, intelligence and many others.

Power, fame and money or all the three are one set of components of life. Though they are considered harmful to human growth, these are important for getting success in material life. Man can use them for betterment of society. Simplicity, knowledge, and happiness or all the three are another set of components of life and they are important for getting success in spiritual life. These can be achieved only by development of personality. What is personality?

The word personality comes from the Latin word persona which means the 'mask'. The masks were used in dramas to show different characters, emotions and behaviour. In Sanskrit' vyaktitva' is the word for personality, which means the essence of vyakti (human being). Hence, personality means the essence of character and



behaviour of a individual. It has two important dimensions: one is internal and the other is the external.

Internal personality means the essence of character and behaviour of oneself with the internal world and the external personality means essence of character and behavior of oneself with the external world. Both dimen sions of personality are inter connected, inter-related and interdependent on each other.

**Dimensions of personality**

According to guna there are three types of personalities: tamasika, rajasika and sattvika. Tamasic means lethargic; this type of personality doesn't like to work; such people are hypo-active and feel inferior. They accumulate or suppress energy. Rajasika means hyper-active; this type of personality always wants some kind of action and feels superior. They spend their energy unnecessarily. Sattvika personality means to be always in a balanced state. This type of personality works hard, tirelessly and will enjoy the work while working and also feels comfortable in no-work situations. They will always conserve their energy for development of personality.

The important point is that out of these three anyone dominates human life and the other two are active to a lesser degree and all these types of personality work on the whole personality of man.

**Internal Personality**

Internal personality is as deep as the ocean and as expansive as space. Scientists of the present era have been doing their research on the external world by using their external personality but all the seers in ancient India have done their research using their internal personality. The internal personality of a human being has five bodies' i.e. physical body, mental body, emotional body, intellectual body and spiritual body. All these bodies are inter-connected, inter-related and inter¬dependent with each other.

**External Personality**

Nobody is an island; an individual is constantly in relation with the external world and always interacts with it i.e. material world, vegetable world, animal world, human being (family, society, nation and humanity) and cosmos. Everything in this universe is an expression of Ishwara (ultimate force). Hence, they are inter-connected, inter-related and inter-dependent with each other.

**A Final word for younger generation today**

Try to realize that no matter what life you were born into, be it a billionaire family, or born into poverty, that you are not "entitled" to anything. Anything simply handed to you be it an apartment paid for your rich parents, or a junker car your family was able to scrounge up the money for so you could get to work while you're in school should be respected and trea sured with the utmost respect, otherwise you show disrespect to your family and yourself.

I personally hold the following to heart (going to change the actual idiom that I've made as I don't want it stolen & used by shallow/hallow people that are "fake awake").:

No matter who you are, you are ultimately no better or worse than anyone else; we each have our own talents and abilities and should respect each other rather than have the delusion of superiority[be it from class, wealth, etc.

Also, respect the elderly. It seems every succeeding generation tends to do so less and less. Just remember kids, you'll be old one day (if you're lucky) and when that day comes, how would you yourself like to be treated?

**Source(s):** Someone who'd love to have his own youtube advice channel/have a bunch of subscribers (and if you think I should, up vote my answer and I just might :)

**- M.K.Venkatnayan**

Owned and Published by **M. SUNDARAMOORTHY** from No. 602, Suruthi Block, Chitra Avenue, 9, Choolaimedu High Road, Chennai - 600 094. and Printed by him at **SRI PADMALAYA PRINTERS,** No. 8/18, Manali Salai, Korukkupet, Chennai - 600 021. Editor. **M. SUNDARAMOORTHY**



தலசம் திரு.என்.முனிரத்தினம் நாயுடு-திருமதி.சரஸ்வதி அவர்களின் புதல்வி டாக்டர். எம்.யுவராணி,M.D.அவர்களுக்கும், திரு.ஞி.சீத்தாராமன்-திருமதி.எஸ்.துளசி அவர்களின் செல்வன். டாக்டர்.எஸ்.விஜய்சரத்சந்தர்,வி.ஷி., அவர்களுக்கும் 04.06.2015 வியாழக்கிழமை அன்று வானகரம் ஸ்ரீவாரு வெங்கடசலபதி பேலசில் திருமணம் நடைபெற்றது. இவ்விழாவிற்கு ஸ்ரீராமச்சந்திரா பல்கலைக்கழக வேந்தர் திரு.வி.ஆர்.வெங்கடாச்சலம் மற்றும் பி.ஜே.பி. கட்சியை சேர்ந்த முக்கிய தலைவர்களும், தொழில் அதிபர்களும் ஆயிரக்கணக்கான நண்பர்களும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். இத்திருமண விழா பி.ஜே.பி.யின் மண்டல மாநாடு போல் காட்சியளித்தது.



வெற்றிவிகாஷ் பழனிவேல் அவர்களின் புதல்வி ப.ஜீவிதா, B.Tech.,MBA.,P.hd அவருக்கும் பிரவின் என்கிறத மெய்ஞானம் B.Tech.,MBA., அவர்களுக்கும் திருமண நிச்சயதார்த்த விழா 18.06.2015 அன்று நாமக்கல்லில் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் புதுச்சேரி முதல்வர் மாண்புமிகு.ரங்கசாமி, மித்ரா எம்.எஸ்.மூர்த்தி மற்றும் பிரபலங்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




KRM
Home Makers Pvt Ltd

## PREMIUM APARTMENTS
## @ AFFORDABLE PRICE

- 2 BHK, 3 BHK Apartments
- 921sq.ft - 1404 sqft-
- 99 Apartments

வளர்ந்து வரும் **K.R.M.** அடுக்கு மாடி குடியிருப்புக்கு ஒட்டிய பின்புறம் தான் ரெட்டேரி உள்ளது. அந்த பிரம்மாண்ட ஏரியில் தமிழக அரசு சுற்றுசூழல் பூங்கா அமைக்க முடிவு செய்து அதற்கான பணிகள் அசுர வேகத்தில் நடைபெற்று வருகிறது. இச்சுற்று சூழல் பூங்காவை சுற்றுலா தளமாக்க ஏரியில் படகு சவாரி, மின்னூற்று (water Foundation), சிறுவர்களுக்கான பொழுதுபோக்கு விளையாட்டுகள் போன்றவை அமைக்கப்பட உள்ளதால் இத்திட்டம் K.R.M. அடுக்குமாடி குடியிருப்புக்கு வருபவர்களுக்கு

**K.R.M. Home Makers Pvt Ltd**

No.1 Jawaharlal Nehru Road (Inner Ring Road) Ponniamman Medu, Kolathur, chennai - 600 099. e-mail : moorthyassociates46@gmail.com

**Contact : 044-65150936**



" What do we live for, if not to Make life less difficult for each other ? "